
ஓம்

சிவ சிவ

# அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில்

## இராமேசுவரம்



2003

விலை : 15.00

# தலவரலாறு

# இராமேசுவரம்
# அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் தலவரலாறு

இந்நூல்

மாண்புமிகு தமிழக முதல்வர்

டாக்டர் **ஜெ. ஜெயலலிதா** அவர்கள்

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர்

**பி.சி. ராமசாமி** அவர்கள்

மற்றும்

இந்து சமய அறநிலையத்துறை செயலர்

திருமிகு. **பி.ஏ. இராமையா** இ.ஆ.ப.,

இந்து சமய அறநிலையத்துறை
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்

திருமிகு. **எம்.ஏ. கௌரிசங்கர்** இ.ஆ.ப.

திருமிகு **பா. பாஸ்கரன்** பி.எஸ்சி.,பி.எல்.,
இணை ஆணையர் / செயல் அலுவலர் / தக்கார்
அவர்களால் வெளியிடப்பட்டது.

வெளியீடு :

**அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில்,**
**இராமேசுவரம்.**

முதல் வெளியீடு 1900 பிரதிகள் மார்ச் 1966
இரண்டாவது வெளியீடு 2000 பிரதிகள் மார்ச் 1967
மூன்றாவது வெளியீடு 5000 பிரதிகள் பிப்ரவரி 1968
நான்காவது வெளியீடு 5000 பிரதிகள் ஜனவரி 1971
ஐந்தாவது வெளியீடு 5000 பிரதிகள் செப்டம்பர் 1972
ஆறாவது வெளியீடு 5000 பிரதிகள் மார்ச் 1974
ஏழாவது வெளியீடு 5000 பிரதிகள் மார்ச் 1978
எட்டாவது வெளியீடு 5000 பிரதிகள் ஜூலை 1981
ஒன்பதாவது வெளியீடு 5000 பிரதிகள் மார்ச் 1986
பத்தாவது வெளியீடு 5000 பிரதிகள் மே 1991
பதினோராவது வெளியீடு 1000 பிரதிகள் மே 1993
பன்னிரெண்டாவது வெளியீடு 1000 பிரதிகள் ஏப்ரல் 1997
பதிமூன்றாவது வெளியீடு 10,000 பிரதிகள் ஜனவரி 1999
பதினான்காவது வெளியீடு 10,000 பிரதிகள் ஏப்ரல் 2002
பதினைந்தாவது வெளியீடு **10,000** பிரதிகள் அக்டோபர் 2003

1. இக்கோயிலின் பூஜகர்கள், கண்காணிப்பாளர்கள் ஆகியவர்களின் விநயத்தினையும், இறை ஊழியத்தினையும் மெய்யாகக்கண்டு கூறுவதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

- ஸ்ரீவிவேகானந்தர்

2. இராமநாதசுவாமி தங்கட்கு அமைதியினையும், மகிழ்ச்சியினையும், வெற்றியினையும், வலிமையினையும், மங்களத்தினையும், நீண்டவாழ்நாளையும், கைவல்ய மோக்ஷத்தையும் அருள்வாராக.

- ஸ்ரீ ஸ்வாமி சிவானந்தா

**பா. பாஸ்கரன்** பி.எஸ்சி.,பி.எல்.,
இணை ஆணையர் / செயல் அலுவலர் / தக்கார்.

# முன்னுரை

இராமாயண கால வரலாற்றோடு தொடர்புடைய இராமேஸ்வரம். இந்திய ஒருமைப்பாட்டின் உறைவிடமாகவும் திகழ்கிறது. நம் நாட்டில் உள்ள புண்ணிய ஷேத்திரங்கள் நான்கில் வடக்கே மூன்றும், தெற்கே ஒன்றுமாக அமைந்துள்ளதோடு இராமேஸ்வரம் மட்டுமே சிவஸ்தலமாக அமையப் பெற்றது. அதுபோல பன்னிரண்டு ஜோதிர்லிங்க ஸ்தலங்களுள் வடக்கே பதினொன்றும் தெற்கே ஒன்றுமாக அமைந்துள்ளது. இத்தகைய சிறப்புடைய இராமேஸ்வரம் மூர்த்தி, தீர்த்தம், ஸ்தலம் ஆகிய முப்பெருமைகளும் உடைய புண்ணிய பூமியாகும். நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் இத்தலத்தின் பெருமை குறித்து பல்வேறு பாக்களை பாடியுள்ளனர்.

பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரை துறவி ஒருவரின் பராமரிப்பில் கூரைக் கொட்டகையாக இருந்த இவ்வாலயம் காலப்போக்கில் பலரால் பல நூற்றாண்டுகளில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு போக்குவரத்தே இல்லாத அக்காலத்தில் இவ்வாலயம் அமைக்க அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி நம் முன்னோர்களின் பக்தி நெறியின் வளர்ச்சியையே எடுத்து இயம்புகிறது. இவ்வாலயத் திருப்பணியில் பெரும்பங்கை இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களும், தேவகோட்டை ஜமீன்தார்களும் செய்துள்ளனர்.

ஆலய அமைப்பும், அடுக்கடுக்கான பிரகாரங்களும் கட்டிட கலைக்கு தனிச் சிறப்பூட்டுவனவாக அமைந்துள்ளது. 1212 தூண்களும் 2250 அடி சுற்றளவும் கொண்ட மூன்றாம் பிரகாரம் உலகிலேயே பெரிய முற்றமாகவும் கட்டிட கலையை சிறப்பிப்பதாகவும் அமைந்துள்ளது.

இத்திருத்தலத்தின் பெருமையையும், வழிபாட்டு முறைகளையும் நாடிவரும் பக்தர்கள் அறிந்து கொள்ளவும் 22 புண்ணிய தீர்த்தங்களின் அமைப்பு அதன் சிறப்பு ஆகியவற்றை உணர்ந்து ஆலய வழிபாடு மேற்கொள்ளவும் "ஸ்தல வரலாறு" என்ற கையேடு மிக அவசியமான ஒன்றாகும்.

அந்த வகையிலே திருக்கோயில் நிர்வாகம் சார்பில், வழிபாட்டு முறை பற்றிய விளக்கங்கள், தங்குமிட வசதிகள், அபிஷேக விபரங்கள் உள்ளடக்கிய புத்தகம் வெளியிடப்படுவதை பக்தர்கள் அனைவரும் படித்து உணர்ந்து, தெரிந்து எல்லாம் வல்ல அருள்மிகு இராமநாத பெருமானின் அருளுக்கு பாத்திரமாக இவ் "ஸ்தல வரலாறு" புத்தகத்தை சமர்ப்பிக்கிறோம்.

இவண்

**பா. பாஸ்கரன்** பி.எஸ்சி.,பி.எல்.,

இணை ஆணையர்/ செயல் அலுவலர் / தக்கார்

# அணிந்துரை

'பக்திமார்க்கம்' என்பது ஒவ்வொருவர் வாழ்க்கையிலும், 'முக்தி' அடைவதற்கு இந்துக்கள் கடைபிடிக்கும் ஒரு கொள்கையாகும். அதற்காக புண்ணியத்தலங்களுக்கு தலயாத்திரை சென்று இறைவனை தரிசித்து, இவ்வுலகில் அமைதியாக வாழவும், சொர்க்கத்தை அடையவும், இறைவனின் ஆசியைப் பெறுவது ஒரு வழியாகும்.

இந்துக்களைப் பொறுத்தமட்டில் இறைவனை தரிசிக்க 'தலயாத்திரை' மேற்கொள்வது ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒரு முக்கியப் பகுதியாகும். உலகத்தில் உள்ள புண்ணிய நதிகள் வயல்களுக்கு நீர் பாய்ச்சுவதுடன் மக்களின் வாழ்க்கையில் ஒழுங்கு முறையை ஏற்படுத்தி அவர்கள் மண்ணிலும், விண்ணிலும் உள்ள சுகங்களை அடைய உதவுகிறது. அலை ஓசையுடன் கூடிய ஆழமான கடல்களும் அதன் அருகிலுள்ள தீர்த்தங்களும் மிகவும் புனிதமானவையாக கருதப்படுவதுடன் அவைகள் இன்றும் வணங்கப்படுகின்றன. அதேபோல, காசியிலுள்ள கங்கையும், இராமேஸ்வரத்திலுள்ள சேதுவும், மிகவும் புனிதமானவையாக விளங்குகின்றன. காசியிலிருந்து தொடங்கப்படும் யாத்திரை இராமேஸ்வரத்திலுள்ள அக்னி தீர்த்தத்தில் நீராடி ஸ்ரீஇராமநாதசுவாமியைத் தரிசித்த பிறகே நிறைவு பெறுகிறது. காஷ்மீர் முதல் கன்னியாகுமரி முடியவும், கல்கத்தா முதல் பம்பாய் வரை உள்ள மக்கள் தினசரி ஆயிரக்கணக்கில் இந்த புண்ணியத்தலத்திற்கு வருகை தருவது மூலம் இத்தலமானது தேசிய ஒருமைப்பாட்டின் உயர்வுக்கு வழிவகுக்கிறது. இத்தலத்தின் புராணத்தன்மை முக்கியத்துவம் மற்றும் புகழானது இராமாயணத்திற்கு இணையாக விளங்குகிறது.

இராமேஸ்வரத்தின் புராதன சரித்திரத்தைப் பற்றி துளசிதாசர் இராமாயணம், கம்ப இராமாயணம் முதலிய வேத இதிகாச புராணங்களில் பல இடங்களில் தெரிவித்துள்ள

கருத்துக்கள் மூலம் நாம் நன்கு அறிய இயலும். இத்தலமானது ஸ்ரீ திருஞானசம்பந்தர், ஸ்ரீ திருநாவுக்கரசர், ஸ்ரீ அருணகிரி நாதர் மற்றும் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் ஆகிய நான்கு பெரிய தமிழ் ஞானிகளால் பாடப் பெற்ற சிறப்பையும் கொண்டதாகும்.

கம்பர் சேதுபந்தத்தைப் பற்றி தனது பெருமை வாய்ந்த இதிகாசமான இராமாயணத்தில் புகழ்ந்து பாடியுள்ளார். ஸ்ரீ இராமபிரான் கடலைக் கடக்க 100 யோசனை நீளமும், 10 யோசனை அகலமும்கொண்ட பாலத்தை திருப்புல்லாணி யிலிருந்து அமைத்தார் எனக் கூறப்படுகிறது. அதுவே, ஆதி சேதுக்கரை என அழைக்கப்படுகிறது புகழ்மிக்க "கலிங்கத்துப்பரணி" என்ற நூலில் இராமேஸ்வரத்தில் ஸ்ரீ ராமர் பாலம் கட்டிய வரலாற்றைப் பற்றி கூறப்படுகிறது.

ஆகவே அநேகமாக எல்லா நூல்களிலும் பாடப் பெற்றுள்ள இராமேசுவரத்தின் பெருமையைப் பற்றி யாத்ரீகர்கள் அனைவரகும் அதிக அளவில் அறிந்து கொள்ள வேண்டிய அவசியத்தைக் கருதி ஒரு 'தலவரலாறு' புத்தகம் வெளியிடுவது அவசிமாகிறது. இவ்வகையில் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் நிர்வாகத்தினர். இத்திருக்கோயிலின் சிறப்பு இயல்புகள் மற்றும் சரித்திர உண்மைகளைப் பற்றி ஒரு புத்தகம் வெளியிடுவது அறிந்து எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. இந்தப் புத்தகமானது யாத்ரீகர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் எனக் கருதுகிறேன்.

இப்புத்தகத்தின் முதல் பாகத்தில் சுவாமி விவேகானந்தர் 1897-ம் வருடம் இத்திருக்கோயிலுக்கு வருகை தந்து அருள்மிகு இராமநாதசுவாமியை தரிசித்தபோது, அவர் ஆற்றிய உரையானது இடம் பெற்றுள்ளது. அடுத்து உலகத்தின் அனைத்து பாகத்திலுமுள்ள அறிஞர்கள் இத்திருக்கோயிலுக்கு வருகை தந்தபோது தெரிவித்த கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

இப்புத்தகத்தின் இரண்டாம் பாகத்தில் தனுஷ்கோடி மற்றும் ராமலிங்கப் பிரதிஷ்டையைப் பற்றிய சரித்திரம் இடம் பெற்றுள்ளது. அடுத்து இத்திருக்கோயிலின் உள்ளே அமைந்துள்ள 22 புண்ணிய தீர்த்தங்கள் மற்றும் வெளியே உள்ள 31 புண்ணிய தீர்த்தங்களைப் பற்றி விரிவான முறையில் விளக்கப்பட்டுள்ளது. அதை அடுத்து இத்திருக்கோயிலில் நடைபெறும் பூஜைகள் அபிஷேகங்கள் வகையறா மற்றும் யாத்ரீகர்கள் வசதியான முறையில் தங்குவதங்கு ஏற்படுத்தப் பட்டுள்ள திருக்கோயில் தங்கும் விடுதிகளைப் பற்றிய விபரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இராமேசுவரத்திலுள்ள அனைத்து இடங்களைப் பற்றியும் இப்புத்தகத்தில் விரிவான முறையில் விளக்கப் பட்டுள்ளதால், யாத்ரீகர்கள் இந்தப் புத்தகத்தின் துணை கொண்டு, வழிகாட்டிகள் உதவியில்லாமலேயே தங்களது யாத்திரையை மேற்கொள்ள இயலும்.

மேலும் இந்தப் புத்தகத்தில் அருள்மிகு இராமநாத சுவாமி அருள்மிகு பர்வதவர்த்தினி மற்றும் இதர முக்கிய இடங்களின் வண்ணப்படங்கள் இடம் பெற்றுள்ளன.

ஆகவே ரூ.15/- விலையில் இந்தப் புத்தகம் கிடைப்பது மிகவும் மலிவானதாகும்.

இந்த மதிப்பு வாய்ந்த தலவரலாறு புத்தகத்தை தமிழில் வெளிக்கொணர இத்திருக்கோயில் நிர்வாகத்தினர் மேற்கொண்டுள்ள முயற்சி வெற்றியடைய எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்,<br>
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,<br>
சென்னை-34.

27-1-1897 அன்று ஸ்ரீ சுவாமி
விவேகானந்தர் இராமேசுவரம் கோவிலில்
செய்த சொற்பொழிவின் தமிழாக்கம்



# உண்மையான வழிபாடு

அன்பே சமயம். தூய உள்ளன்பிலன்றிப் புறச்சடங்குகளில் சமயம் நிலைப்பதில்லை. உடற் சுத்தமும் உள்ளத்தூய்மையுமின்றிச் சிவபெருமானை வழிபடுதலில் பயனில்லை. சுத்தமான உடலுடனும், தூய்மையான பிரார்த்தனைகளே செவி சாய்க்கப் பெறும். தூய்மையற்றவரும் பிறருக்கு சமய போதனை செய்ய முயலுகின்றனர். ஆனால் இறுதியில் அவர்கள் முயற்சி தோல்வியுறும். புறவழிபாடு என்பது உள்ளங்கனிந்த பக்தியின் ஒரு சின்னமேயாகும். ஆனால் பக்தியும், தூய்மையுமே உண்மையில் வேண்டுவன. அவையிரண்டுமின்றிச் செய்யும் புற வழிபாட்டினால் பயனில்லை. ஆகையால் இந்த உண்மையை நீங்கள் யாவரும் நினைவில் வைத்துக்கொள்ள முயலவேண்டும்.

மனத்தூய்மையின்றி ஒருவன் கோவிலுக்குள் சென்றால் அவன் ஏற்கனவே செய்துள்ள பாவங்களோடு மற்றொரு பாவத்தையும் செய்தவனாகிறான். ஆகவே அவன் தன் வீட்டை விட்டுக்கோவிலுக்குப்புறப்படும் பொழுது இருந்ததை விட இன்னும் இழிந்தநிலையில்தான் ஆலயத்தினின்றும் வீட்டிற்குத் திரும்புகிறான். தீர்த்தாமாடும் க்ஷேத்திரத்தில் அநேக புனித வஸ்துக்களும் பரிசுத்தமான மக்களும் உறைகின்றனர். சாதாரணமான ஓர் இடத்தில் புரிகிற பாவத்தை எளிதில் போக்கிகொள்ள முடியும். ஆனால், தீர்த்ததலம் ஆகிய புனித க்ஷேத்திரத்தில் புரியும் பாவத்தைப் போக்க வழியேதுமில்லை.

எல்லாவித வழிபாட்டின் சாரமாவது. தூய உள்ளத்துடன் பிறருக்கு நன்மை புரிவதுதான் ஏழை எளிய மக்கள் நோயுற்ற மக்கள் இவர்களிலே சிவத்தைத் காண்பதுதான் உண்மையான சிவ வழிபாடு. விக்ரஹங்களில் மட்டும் சிவனைக் காண முயலுவது வழிபாட்டின் பூர்வாங்கமேயாகும்.

கோவிலில் மட்டும் சிவத்தைக் காண விழைகின்றவனைக் காட்டிலும் ஜாதி, மதம் மற்ற யாதொரு பேதமுமின்றி ஓர் ஏழை மனிதனிடம் கடவுளைக் கண்டு அவனுக்குச் சேவை செய்து உதவி புரிகின்றவன்தான் சிவபெருமானின் இன்னருளுக்குப் பாத்தியமாகிறான்.

சிவபெருமானுக்குச் சேவைசெய்ய விரும்புகிறவன் அவனுடைய படைப்புகளாகிய உலகத்தில் உள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் சேவைசெய்ய முற்படவேண்டும். சிவனடியார்களுக்குச் செய்யும் சேவைதான் சிவபெருமானுக் குச் செய்யும் சிறந்த சேவையென சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆதலால் இந்த உண்மையை நீங்கள் தெளிவாய் உணர வேண்டும்.

மீண்டும் நான் உங்களுக்குக் கூறுவதாவது, உங்களை நாடிவரும் எவருக்கும் உங்கள் சக்திக்கு இயன்றவரை தூய உள்ளத்துடன் உதவிபுரிய வேண்டும். இந்தக் குணத்தில்தான் உங்கள் உள்ளம் தூய்மையடைந்து "சித்தசுத்தி" அடைய முடியும். அப்பொழுது நம்மிடத்லுறையும் சிவபெருமான் எங்கும் நீக்கமற்ற நிறைந்தவராவார். அவர் எப்பொழுதும் யாவருடைய உள்ளத்திலும் குடிகொண்டுள்ளார். சுயநலமின்மையே உண்மையான சமயப் பற்றுக்குச் சான்று. ஒருவன் எவ்வளவுக்குத் தன்னலமின்றிப் பிறருக்கென வாழ்கின்றானோ அந்த· அளவுக்கு அவன் ஆன்மீக ஞானம் பெற்றுச் சிவபெருமான் அருகே இருக்கக்கடவன். அவன்தான் படித்தவரையினும், பாமரனாயினும் அறிந்தோ அறியாமலோ மற்ற எவரைக்காட்டிலும் சிவபெருமான் பக்கத்திலே இருக்க அருகதையுள்ளவனாகிறான். அப்படியின்றி ஒருவன் சுயநலம் மிக்கவனாயிருப்பின் அவன் எல்லாக் கோவிலுக்கும் சென்று க்ஷேத்ராடனம் செய்திருப்பினும் சிறுத்தையுடல் போலத் தன்னுடம்பு எல்லாம் நீறுபூசித் திலகம் தீட்டித் திரியினும், அவன் சிவபெருமானை விட்டு வெகுதூரம் விலகியுள்ளவனே யாகிறான்.

(ஸ்ரீசுவாமி விவேகானந்தரின் ஞாபகார்த்தமாய் இதனைக் கல்லில் வடித்து, இராமேசுவரம் குடகோபுர வாசலில் அவர் உபன்யாசம் செய்த இடத்தில் பதிக்கப் பெற்றுள்ளது)

# கோவிலை தரிசித்தவர்களின் கருத்துக்கள்

(a) யாத்திரைகளை மேற்கொண்டு தேசத்தின் பூகோள அறிவைப்பெற மிகவும் உபயோகமான சாதனமாகும் இதன்மூலம் மக்கள் ஒரு தேசத்தைப் பற்றி அது பூகோள இயல் கொண்ட வெறும் பூமி மட்டுமல்ல. ஓர் முனையிலிருந்து மறு முனை வரை ஜீவன் நிறைந்த பரம் பொருந்திய மக்கள் சமூகம் என்பதை அறிய மிகவும் பயன்படும். புனித இடங்களுக்கு யாத்திரை மேற்கொள்ளும் வழக்கம் நம் நாட்டில் எல்லா வயது மக்களிடையேயும் தொன்று தொட்டு காலங்காலமாக இருந்துவரும் ஒரு தேசீய காரியமாகும். ரயில் போன்ற போக்குவரத்துச் சாதனங்கள் இல்லாத பழங்காலத்தில் இவ்வாறான யாத்திரைகள் தன் நாட்டின் பல நற்பணி இயக்கங்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குப் பரப்ப உதவும் சாதனமாயிருந்தன. இதில் ஏற்றத்தாழ்வு தனித்தனி ராஜ்ய உணர்ச்சி முதலியவற்றுக்கு இடமே இருந்ததில்லை.

- ராதா குமுத முகர்ஜி

(b) இந்தியாவில் தேசீய ஐக்கியத்துக்கு அடிப்படையா யிருந்தது ஹிந்து மதம்தான். ஹிந்து மதம் நாடு முழுவதிலுமுள்ள ஹிந்துக்களை, அவர் எம்மொழி பேசுபவராயினும், எந்த மாகாணத்தைச் சேர்ந்தவராயினும் ஒரே ஹிந்து என்ற இனத்தவராக இணைந்து வந்துள்ளது.

- நபகோபால் மித்ரா

1. தற்கால இந்தியாவை அதன் மிகப் பழைய காலத்தோடு இணைத்துக்காட்டும் ஜீவன் பொருந்திய சங்கிலி போன்ற பெருமை வாய்ந்த கோயில்களில் இதும் ஒன்றாகும். இந்த கோயில் தன் பழைய புனிதமான, பழக்க வழக்கங்களைச் சற்றும் விட்டுக் கொடுக்காமலே, புதிய காலத்து வசதிகளையும் பயன்படுத்திக் கொள்ளுவது மிகவும் போற்றத்தக்கது.

- எஸ்.வி. ராமமூர்த்தி (I.C.S.)

2. இந்தியா முழுவதையும் காணும் பொருட்டு வெகு தூரம் யாத்திரை செய்பவர்களுக்கு இராமேசுவரம் நல்ல விபரம் அளிப்பதாயிருக்கிறது. விரிவான முறையில் மேற்கொள்ளப்படும் இந்த யாத்திரைகளிலெல்லாம் இராமேசுவர யாத்திரையும் கட்டாயம் சேர்க்கப்பட வேண்டும்.

- திருமதி. வில்லியம் ஹெச்மூர். நியூயார்க்.

3. பழமையான சரித்திரப் புகழ் வாய்ந்த ஒரு கோயிலைப் பார்க்கவே நாம் ஆவலோடு சென்றோம். ஆனால் இங்கு எதிர்பார்த்ததற்கு மேலாக மிக அதிகமாகவே காணக் கிடைத்தது.

- சி.இ. ஜோன்ஸ் I.C.S

4. மிக அருமையான அனுபவம் வியக்கத்தக்க பெருமை வாய்ந்த கோயில், கட்டடக்கலைத்திறமையில் இதன் நீண்ட தூண் வரிசைகள் மற்ற எல்லா ஹிந்துக் கோயில்களையும் விட என்னை அதிகம் கவர்ந்தன.

- வில்லியம் ஹீந்கோட்

5. மேல் தளத்திலிருந்து கோயிலின் உட்புறம் முழுவதையும் கோயிலின் கோபுரம் வரை காண்பதுதான் இதுவரை பார்த்த எந்தக் கோயிலிலும் காணக் கிடைக்காத ஒரு காட்சியாகும்.

- பிராங்ளீன் எட்கார்டன். யு.எஸ்.ஏ.,

6. சர்வ தீர்த்தத்திலும் கோடி தீர்த்தத்திலும் நீராடிய வுடன் சரீரத்தில் மின்சாரம் போன்ற ஒரு சுறுசுறுப்பான உணர்ச்சி தோன்றுகிறது.

- ஒரு சர்ஜன்.

7. இது மிக உன்னதமான கோயில் ........................ இந்துக்களின் கட்டக்கலைத் தேர்ச்சிக்கு இது ஒரு வியக்கத்தக்க எடுத்துக்காட்டு.

- தேஜ்பகதூர் சாஸ்திரி

8. இந்தக் கோயிலில் பிரகாரங்களின் உள்ளே மனதிற்கு அமைதி அளிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை நிலவுகிறது. சிறந்த வேலைகளைத் தாங்கி நிற்கும் கல்தூண் வரிசைகள் கண்களுக்கு இனிய விருந்தாகும். மனதிற்கு நிம்மதியும் அமைதியான கடவுள் வழிபாடும் வேண்டுவோர்

இராமேசுவரத்திற்கு வரவும் என்பதே இந்தப் புகழ் வாய்ந்த கோயில் நமக்கு விடுக்கும் வேண்டுகோள் எனத் தோன்றுகிறது.

-எம்.வி. வெள்ளோடி

9. இந்தக் கோயிலின் வனப்பு வாய்ந்த அமைப்பும் இதன் தொன்றுதொட்டு வரும் பழக்க வழக்கங்களும் என்னை மிகவும் கவர்ந்தன.

- எஸ். ராதாகிருஷ்ணன்

10. இதன் தூய்மைக்கும் இதன் வாய்ப்புக்கும் ஈடான கோயில்கள் இந்தியாவில் மிகக் குறைவாகவே உள்ள... இந்த கோயிலின் காரியங்கள் யாவற்றையும் ஒவ்வொரு இந்தியனும் தாராளமும் தார்மீகமும் நிறைந்த உணர்வோடு நோக்க வேண்டியது அவசியம். இந்த மதத்தினருக்கு இது ஒரு மிகப் பெரிய தேசிய சொத்தாகும்.

- லக்ஷ்மி காந்த்

11. இந்தப் பெருமை வாய்ந்த கோயில் இந்துக்களுக்கு ஒரு மிகப் பெரிய தேசிய சொத்தாகும்.

- போத்ராம் துபே

12. இந்தக் கோயில் மகோன்னதமான தொழுகை ஸ்தலங்களில் ஒன்றாகும். இதன் கட்டிக்கலை மிகவும் நேர்த்தியானதும் பெருமை வாய்ந்ததுமாகும்.

- யாகூப் ஹஸன்

13. இந்த கோயில் இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு ஒரு கண்கூடான சின்னமாகும். இது இந்தியாவின் வலிமை வளர்ச்சி, திறமை இவற்றிற்கு எடுத்துக்காட்டாகும்.

-கே.எஸ். ராமசுவாமி சாஸ்திரி

14. இந்தக் கோயில் மிகவும் புனிதமானது என்று வட இந்தியரும், ஏற்றுக்கொள்ளச் செய்ததன் மூலம் நம் முன்னோர் நமது ஆழ்ந்த அறிவை வெளிப்படுத்தியுள்ளார்கள். இதன் மூலம் அவர்கள் இந்தப் பரந்த நாட்டில் தார்மீக, கலாச்சார ஒற்றுமைக்கு வழிவகுத்துள்ளனர். இக்கோயிலின் பிரகாரங்களில் யாழ்ப்பாணத்துத் தமிழனும் ஒருங்கே தோளோடு தோள் உராய்ந்து கொண்டு செல்வத்தைக் காண்கிறோம். தென்னிந்தியாவில் உள்ள மிக உயர்ந்த கோயில்களில் இதுவும் ஒன்றாகும்.

- வி.வி. சுப்ரமண்யன்

15. இந்தக் கோயிலின் திறமை வாய்ந்த திருப்தியளிக்கக் கூடிய நிர்வாகத்தை நான் மனதாரப் புகழ்கிறேன்.

- சியாம் பிரசாத் முகர்ஜி

16. கடவுளின் அடுத்த அவதாரத்தின்போது கூட இந்தக் கோயில் இதே மாதிரி வழிபாட்டிற்கு உரிய ஸ்தலமாக விளங்கிவரும் என்பதில் சற்றும் ஐயமில்லை.

- எல்.எஸ். பார்த்தசாரதி

17. இந்த ஆலயத்தின் பெருமையை உணரவேண்டுமானால் இங்கே நேரில் வந்துதான் காணவேண்டும். இதன் அமைப்பு, மிகவும் உயர்ந்ததாக, வியப்பூட்டுவதாக இருக்கிறது.

- சுவரண்சிங்

18. இந்தப் புனிதமான ஆலயம், இந்த நாட்டு மக்கள் எந்த மொழி பேசுபாவராயினும் எந்த மாகாணத்தில் வசிப்பவராயினும் எல்லாரையும் ஒருங்கே சேர்க்கும் வலிமை வாய்ந்த சாதனமாகும்.

- பீம்சேன் சச்சார்

19. இந்த ஆலயம் இந்தியா முழுவதிலுமுள்ள புனிதமான ஆலயங்களுள் ஒன்றாகும். வட இந்தியாவாசி களான எங்களை இது தனது வலிமை வாய்ந்த ஆத்மீக காந்தத்தினால் தென்னிந்தியாவுக்கு இழுக்கிறது. இராமபிரானே இங்குத் தன் கையால் லிங்கப் பிரதிஷ்டை செய்து பூஜை செய்தார் என்பதைக் கேட்க மயிர் கூச்சு ஏற்படுகிறது.

- கரண்சிங்

20. இராமேசுவரம் பல்லாயிரக்கணக்கான மக்களுக்குப் பற்பல ஆண்டுகளுக்கு நம்பிக்கையூட்டும் ஸ்தலமாக இருந்து வருகிறது. இனியும் இதே மாதிரி இருந்து வரும்.

-எபி. பட்டானி

21. இந்த ஆலயம் அமைந்துள்ள இடம், இங்கு நிலவி வரும் வழிபாட்டு வழக்கங்கள் முதலியன யாவும் மனத்தில் மிகுந்த ஊக்கம் ஊட்டுவதாயிருக்கின்றன. இது நம் நாட்டின் தேசிய சொத்து. இதன் பெருமையைக் காப்பாற்றுவதுடன்

நாமும் நம் வாழ்க்கையிலும் ஆன்மீகத் துறையிலும் மிகவும் உயர்ந்து நம் கலாச்சாரங்களைப் போற்றி வளர்க்க வேண்டும்.

-ஜி.வி.மாவ்லங்கர்

22. இந்த ஆலயத்தின் பரந்த அமைப்பும் வனப்பும் நம் கற்பனைக்கு சற்றும் எட்டாத விஷயமாகும். இதைப் பார்க்கும்போது நாம் நமது முன்னோர்களின் முன்பு எத்தனை சிறியவர்கள் என்பது புலனாகிறது.

- எல். மிச்ரா

23. இந்தப் பழமையான சரித்திரப் புகழ் வாய்ந்த ஆலயத்தின் கம்பீரமான சிற்பக்கலை வேலைப்பாடுகளும், தனது வலிமை வாய்ந்த சூழ்நிலையும், நம் நாட்டின் வைதீக ஆகம கலாச்சாரங்களைக் காக்கும் சின்னமாக விளங்குகின்றன.

- சுத்தானந்த பாரதியார்

24. பாரத நாட்டில் பல மறக்க முடியாத சரித்திர நிகழ்ச்சிகளுடன் சம்பந்தப்பட்ட இந்தப் பெரிய யாத்திரை ஸ்தலத்துக்கு வரமுடிந்தது மகிழ்ச்சியடைகிறேன். இந்தத்தலம் நமக்கு இராமபிரானின் நினைவை ஏற்படுத்துகிறது. பல நூற்றுக்கணக்கான பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் மனதில் உண்மையான ஊக்கம் பெறும் பொருட்டு இங்கு வந்துள்ளனர். இனியும் வந்து கொண்டிருப்பார்கள்.

- லால் பஹதூர் சாஸ்திரி

25. இம்மாதிரியான ஆலயங்கள் நமது பெரிய நாட்டின் ஒற்றுமைக்கும், ஆன்மீக, சமூக, தார்மீக வளர்ச்சிக்கும் அடையாளமாக உள்ளன. நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்து மக்கள் இங்கே ஒன்று சேரும்போது அவர்கள் தங்களுக்குள் பல்வேறு பொது விஷயங்களைப் பேசி, நாம் யாவரும் பிரிக்க முடியாத ஒரே இனத்தவர் என்பதை உணர்கின்றனர். தற்காலத்துப் புதுப் பழக்கங்கள் இந்த பழமையான ஆன்மீகப் பழக்க வழக்கங்களை எவ்வளவுதான் மாற்ற முயற்சித்தாலும், பாரத நாட்டில் ஆன்மீக ஒருமைப்பாடு குன்றாது நிற்க வேண்டும். தற்கால இந்தியாவின் மக்களாகிய நாம் நம் முன்னோர்களின் அறிவையும், தூரதிருஷ்டியையும் கண்டு பெருமைப்பட வேண்டும். இம்மாதிரியான புனித யாத்திரை

ஸ்தலங்கள் சுயநலவாதிகளால் சிருஷ்டிக்கப்பட்ட பொய்யான நடைகளைத் தகர்த்துவிடுகின்றன.

- கந்துபாய் தேசாய்

26. இந்தியாவின் கலாச்சார ஒருமைப்பாட்டிற்கும் இது மற்றொரு இணைப்பு சங்கிலியாகத் திகழ்கின்றது.

- பல்வந்த்ராய் மேத்தா

27. இதனுடைய அமைப்பின் கம்பீரத்தையும் இதை நிர்மானித்தவர்களுடைய கற்பனைத் திறனையும் கண்டு வியப்படைந்தேன்.

-திரு. ஸ்ரீ பிரகாசா

28. வட இந்தியர்களுக்கு இராமேஸ்வரம் புனிதமானதாக இருப்பதுபோல் வேறு எந்த தீர்த்தமும் இல்லை.

- திரு. கிருஷ்ணசின்ஹா

29. இராமாயாண மஹா காவியத்தில் இடம் பெற்றுள்ள இந்தத் தலமானது எல்லா அழகையும் எல்லாத் தெய்வீக ஆனந்தத்தையும் ஒருங்கே தன்னுள் கொண்டுள்ளது. ஆதலால் இங்கு வரும் உண்மையான யாத்திரிகர்கள் எல்லாரும் தம் மனதில் புனிதமான தெய்வீகமான எண்ணங்கள் அடைவார்கள் என்பதிலும் ஐயமில்லை. இந்த இடம் மேன்மேலும் பெருமை பெற்று வருமாக.

-ஐயசாம ராஜேந்திர உடையார்

30. நான் இங்கு வரும் ஒவ்வொரு தடவையும் மனத்தில் அமைதி பெற்று. மனத்தூய்மை அடைந்து மற்றொரு முறை இங்கு வர வேண்டும் என்ற எண்ணத்துடனேயே திரும்பிச் செல்கிறேன்.

- பி.ஸி.கங்குலி

31. இந்த ஆலயம் எண்ணற்ற ஆன்மீக உயர்வுக்கான அருள் கிரணங்களைப் பொழிகிறது. மனிதகுலம் முழுவதிலும் நலத்திற்காக இந்த ஆலயம் என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டும்.

- தலாய்லாமா

32. மனக்கவலையும், துக்கமும், கலக்கமும், யாத்திரிகர்கள் இந்த ஆலயத்திற்கு வந்தால் மன ஆறுதலும், உள்ளத்தூய்மையும் அடைகின்றனர்.

-சுவாமி கேசவையாஜி

33. இன்று நான் எனது குடும்பத்தோடு இத்திருத்தலத் திற்கு வந்து சேவிக்கும் வாய்ப்பு பெற்றேன். கோவிலின் சுற்றுப்பற சூழ்நிலை நன்றாகப் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. இத்திருத்தலத்தில் பணிபுரியும் யாவரும் நமது பாராட்டுதலுக்கு உரியவர்கள்.

- சு.இரத்திவேல்பாண்டியன்,
நீதிபதி, உச்சநீதிமன்றம், புதுடெல்லி

34. இராமேசுவரம் திருராமநாதசுவாமி சந்நிதானத்தில் இறைவன் அருள் கிடைக்க பெற்றேன். இங்கு நிர்வாகம் நல்லமுறையில் செயல்படுகின்றது. மேலும் சிறப்படைய இறைவன் அருள் செய்ய வேண்டும்.

- வி. வைத்தியலிங்கம் முதல்வர், பாண்டிச்சேரி

35. எத்தனை முறை கோவிலுக்கு வந்தாலும் பலன்தரும் இராமேசுவரம். கோயில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம். இறைவன் குடி இருக்கும் மனது உள்ளவர்க்கு என்ன குறை?

- இளையராஜா

36. My God Rameswara bless us all, I pray almighty God Rameshwar to give us oppurtunity to have Darshan again and again with all devotion and give us strength and wishdom to serve the Herminity.

- Jaganath Pahadia, Governor of Bihar.

37. Thanks to all the staff member who helped me in getting darshan. Great Hindu tradition must be maintained.

Rajendra KumariBajpai, Governor of Pondichery.

38. We offer prayer to Lord Shiva here. I extened my thaks to management committee for nice arrangement here.

- Prabulla Kr. Mehanta, Chief Minister of Assam.

## இந்த தீவில் பார்க்க வேண்டியவை



### *(அ) ஆலயத்தினுள்ளே*

அருள்மிகு ஸ்ரீ விக்னேசுவரர்
அருள்மிகு ஸ்ரீ ராமநாதசுவாமி
அருள்மிகு ஸ்ரீ பர்வதவர்த்தினி
அருள்மிகு ஸ்ரீ விசுவநாதர்
அருள்மிகு ஸ்ரீ விசாலாட்சி
அருள்மிகு ஸ்ரீ சேதுமாதவர்
அருள்மிகு ஸ்ரீ ஜோதிர்லிங்கம்
அருள்மிகு ஸ்ரீ சஹஸ்ரலிங்கம்
அருள்மிகு ஸ்ரீ வஜ்ரேஸ்வரர்
அருள்மிகு ஸ்ரீ நடராஜர் (மூன்று இடங்களில்)
அருள்மிகு ஸ்ரீ பள்ளிகொண்ட பெருமாள்
அருள்மிகு ஸ்ரீ ஆஞ்சனேயர்
அருள்மிகு ஸ்ரீ அறுபத்து மூன்று நாயன்மார்கள்
அருள்மிகு ஸ்ரீ சிவதுர்கா
அருள்மிகு ஸ்ரீ மஹாலக்ஷ்மி

### *மற்ற தேவதைகள்*

இரண்டாவது பிரகாரம் திருப்பணி வேலை
மூன்றாவது பிரகாரம்
இராமலிங்கப் பிரதிஷ்டை வாகனங்கள்

### *(ஆ) வெளியே*

அக்கினித் தீர்த்தமும் சங்கரமடமும்
லக்ஷ்மண தீர்த்தம்
இராம தீர்த்தம்
சீதா தீர்த்தம்
கந்தமாதன பர்வதம்

அருள்மிகு கோதண்டராமா கோயில்



அருள்மிகு நம்புநாயகி அம்மன் கோயில்

அருள்மிகு உஜ்ஜயினி மகாளியம்மன் கோயில்

பாம்பன் ரயில் பாலம்

பாம்பன் சாலைப் பாலம்

# இராமேசுவரமும் தனுஷ்கோடியும்

## *இராமேசுவரம்*

இந்துமதக் கோட்பாடுகளில் "பக்தி மார்க்கம்" என்பது அன்றும் இன்றும் பரவலாகக் கடைபிடிக்கப்பட்டு பிறவாப் பெருநிலை எய்த உதவுவது. இது திருக்கோயில்களில் ஸ்தல யாத்திரை சென்று சர்வேசுவரனை வழிபட்டுப் பேரின்பம் பெறுவதாகும்.

இராமேசுவரத்தின் பழமையும், புகழும், இராமாயணத் கால வரலாற்றோடு தொடர்புடையது. இத்திருக்கோயில் காசிக்கு நிகரான யாத்திரைத் தலமாக முக்கியத்துவம் பெற்றது. காசியில் தொடங்கப்பட்ட யாத்திரை இராமேசுவரத் தில் மூர்த்தியை வழிபட்ட பின்னர்தான் முடிவு பெறுகின்றது. காசிக்குச் சென்ற பலன் கைகூடுவது இராமேசுவரத்தில்தான் என்பது ஆன்றோர் வாக்கு.

இராமேசுவரம் என்ற புனித நாமம் இராமச்சந்திர மூர்த்தியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஈசன் எழுந்தருளியுள்ள புனிதத்தலம் என்பதை இயல்பாகவே குறிக்கின்றது. மூல ஸ்தான மூர்த்தியை இராமேசுவர். இராமலிங்கம், இராமநாதர் என்று பலவாறாக அழைப்பர்.

இராமேசுவரத்தில் வழிபாடும், மகோததியும் (வங்காள விரிகுடா) இரத்தினாகரமும் (இந்துமாக்கடல்) கூடுமிடமான தனுஷ்கோடியில் (சேது) முழுக்கும் செய்தால்தான் காசி யாத்திரை பூர்த்தியாகும். சேது என்ற வடமொழிச் சொல்லுக்குப் பாலம் என்று பொருள். இராமபிரான் இலங்கையை அடைவதற்காக கட்டிய அணையையே இது குறிக்கிறது. இராவணன் தம்பியும் இராமனின் நண்பனுமான

விபீஷணனின் வேண்டுகோளுக்கிணங்கி இராமன் சேது அணையை வில்நுனியில் உடைத்ததால் தனுஷ்கோடி என்ற பெயர் ஏற்பட்டது. (தனுஷ்-வில், கோடி-முனை) இராமன் தன் வில் முனையால் சேதுவுக்கு இடம் காட்டியமையால் இப்பெயர் உண்டாயிற்று. முன்னும் பின்னும் இரண்டு கடல்கள் சங்கமமாகும் சேது தீர்த்தத்தில் முழுகவேண்டும் என்பது ஐதீகம். ஆனால் இப்போது இராமேசுவரத்துக்கு முதலில் போய் பிறகு தனுஷ்கோடிக்குச் செல்கிறார்கள்.

இரு கடல் சங்கமத்தில் பிதுர்க் கடன் செய்தலும், அஸ்தி கரைத்தலும் வழக்கமாக நடக்கின்றன. தொடர்ந்து காணப்படும் பாறைகளும் சிறுதீவுகளும் பழம்பெறும் சேதுவின் எஞ்சிய பகுதிகள் என்று சொல்லப்படுகின்றன.

இராவண சம்ஹாரம் முடிந்ததும் மகரிஷிகளின் கருத்துப்படி இராவணனைக் கொன்ற பிரமஹத்தி தோஷம் நீங்குவதற்காக இராமன். சீதை இலட்சுமணனுடன் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து வழிபட்டார் என்று புராணங்கள் கூறுகின்றன. (இராவணன் பிரமனுடைய பேரன் மகன் ஆனதால் பிராமணன்) பிரதிஷ்டை செய்வதற்கு நல்ல வேளை குறித்து கைலாசத்திலிருந்து லிங்கம் கொண்டு வரும்படியாக இராமன் அனுமானை அனுப்பியதாகவும், நெடுந்தொலைவிலுள்ள கைலாசத்திலிருந்து ஆஞ்சநேயர் லிங்கம் கொண்டுவருவதற்குக் காலம் தாழ்ந்ததால். சீதை மணலால் செய்த லிங்கத்தை ஸ்தாபித்து வழிபட்டனர் என்றும் சொல்லப்படுகிறது. திரும்பி வந்த அனுமன் கோபம் கொண்டு மணலால் செய்யப்பெற்ற லிங்கத்தை அகற்ற முயன்றும் இயவில்லை. அனுமானை ஆறுதல் செய்வதற்காக இராமலிங்த்தின் பக்கத்தில் அனுமன் கொண்டுவந்த விசுவலிங்கத்தை ஸ்தாபித்து, அதற்கே பூசை முதலியன முதலில் செய்ய வேண்டுமென்று இராமன் ஆணையிட்டார்.

இந்தியாவிலுள்ள இந்து ஆலயங்களில் வடக்கே பத்ரிநாதம், கிழக்கே பூரிஜெகந்நாதர், மேற்கே துவாரகம், தெற்கே இராமநாதம் (இராமேசுவரம்) ஆகியவை புகழ் பெற்றன. இவைகளில் இராமநாதம் ஒன்றே சிவத்தலம்,

மற்ற மூன்றும் வைணவத் தலங்கள். இராமபிரான் (வைணவர்) ஈஸ்வவரனை சிவலிங்க வடிவில் (சைவத்தை) பிரதிஷ்டை செய்தார் என்பதாலும், சைவ மதத்தினரும் வைணவ மதத்தினரும் வந்துகூடி வழிபடுவதாலும் இந்தியாவிலுள்ள இந்து ஆலயங்களில் இராமேசுவரம் மிகவும் முக்கியமான இடத்தை வகித்து வருகிறது.

மேலும் இந்தியாவிலுள்ள பன்னிரண்டு ஜோதிர்லிங்க ஸ்தலங்களில் ஒன்று அருள்மிகு இராமலிங்கம் அமைந்த இராமேசுவரம் ஆகும். மற்றவை சௌராஷ்டிரத்தில் ஸ்ரீ சோமநாதேஸ்வரர். ஸ்ரீ சைலத்தில் ஸ்ரீ மல்லிகார்சுனர். உஜ்ஜினியில் ஸ்ரீ மகாகாளேஸ்வரர். அமலேஸ்வரத்தில் ஸ்ரீ ஓம் காரேஸ்வரர், பரலியல் ஸ்ரீ நாகேஸ்வரர், பரலியில் ஸ்ரீ நாகேஸ்வரர், வாரணாசியில் ஸ்ரீ காசி விஸ்வநாதர், நாசிக்கில் ஸ்ரீ திரியம்பகேஸ்வரர், ஹிமாலயத்தில் ஸ்ரீ கேதாரேஸ்வரர் மற்றும் எல்லோராவில் ஸ்ரீ குஸ்ருநேஸ்வரர் ஆகிய திருநாமங்களில் வழிபடப்பட்டு வருகின்றன.

காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரையும் வங்காளம் முதல் பம்பாய் வரையும் அதற்கு அப்பாலும் பரந்து விரிந்துள்ள பாரத தேசத்தில் தேசிய ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் வளர்க்கக்கூடிய இடமாக இப்புனிதஸ்தலம் விளங்கி வருகிறது. இராமேசுவரம் கோவிலில் விசாலாட்சி அம்பிகை சந்நிதிக்குப் பக்கமுள்ள ஜோதிர்லிங்கம் விபீஷணனால் நிலை நிறுத்தப் பெற்றது.

இராமேஸ்வரம் ஒரு தீவு. ஒரு குறுகிய கடல் பகுதியால் பெருநிலப் பகுதியினின்றும் பிரிக்கப் பெற்றிருக்கிறது. பாம்பன் மண்டபம் என்று இரண்டு இரயில் நிலையங்களையும் இந்தக் கடல் பகுதியின்மேல் போடப்பட்டிருக்கும் இரயில் பாலம் இணைக்கிறது. பாலமும், சாலைப்பாலமும். பாம்பனி லிருந்து வடகிழக்கில் இராமேஸ்வரமும் தென்கிழக்கில் தனுஷ்கோடியும் உள்ளன. பாம்பனிலிருந்து தனுஷ்கோடி இரயில் பாதை 1964-ம் வருடம் வீசிய கடும்புயலால் அழிக்கப்பட்டு விட்டது. முன்பு இராமேசுவரத்திலிருந்து தனுஷ்கோடிக்கு இரயில்பாதை போடப்பட்டிருந்தும் ஆறு

மண்மேடுகளால் [illegible] அந்த இரும்புப்பாதை கைவிடப்பட்டது. இப்போது இராமேசுவரத்திலிருந்து தனுஷ்கோடிக்கு நடந்தும், படகுகள் மூலமும் கடற்கரையோரமாகச் செல்லலாம். தற்போது பஸ் போக்குவரத்தும் உள்ளது. இராமாவதாரம் எடுத்த விஷ்னுவின் கைகளிலுள்ள இரண்டு ஆயுதங்களில் ஒன்றான சங்கு போன்ற உருவத்தில் அமைந்திருக்கிறது இராமேசுவரம் தீவு.

## இராமநாதர் கோயில்

இராமேசுவரம் தீவில் மிகவும் முக்கியமானது இராமநாதசுவாமி கோயில். மீனவர்களைத் தவிர மற்ற பெரும்பாலான மக்கள் கோயில்களையும் யாத்திரிகர் களையுமே நம்பி வாழ்கின்றனர். தென் இந்தியாவிலுள்ள எல்லாப் பழைய கோயில்களிலுமுள்ளது போல் இராமநாதர் கோயிலுக்கும் உயர்ந்த மதிற்சுவர்கள் உள்ளன. கிழக்கு மேற்கில் 1.1/3 பர்லாங்கு (865) அடி நீளமும், தெற்கு வடக்கில் 1 பர்லாங்கு (657) அடி அகலமும் இருக்கின்றன. கிழக்கிலும் மேற்கிலும் பெரிய கோபுரங்களும் வடக்கிலும் தெற்கிலும் முற்றுப் பெறாத மொட்டைக் கோபுரங்களும் அமைந்துள்ளன. இவ்விரண்டு மொட்டைக் கோபுரங்களும் காஞ்சி ஸ்ரீ சங்கரமடத்தின் உபயமாக கட்டப்படவுள்ளது. இத்திருக்கோயிலின் மிகச்சிறந்த பகுதி அதன் நீண்ட மூன்றாம் பிரகாரங்களே. இரு புறங்களிலும் ஐந்தடி உயரமுள்ள மேடை மேல் தூண்கள் வரிசையின் நடுவே இப்பிரகாரங்கள் அமைந்துள்ளன. மூன்றாவது மேற்குப் பிரகாரமும் மேற்குக் கோபுர வாயிலிருந்து சேது மாதவர் சந்நதிக்குப் போகும் வழியில் கூடுமிடமும் சொக்கட்டான் பலகை போல் அமைந்திருப்பதால், அந்த இடத்திற்குச் சொக்கட்டான் மண்டபம் என்று பெயர். வசந்தோற்சவத்தில் இம்மண்டபத்தில் உற்சவ மூர்த்திகள் அலங்கரிக்கப்பட்டு எழுந்தருளச் செய்யப்படும். இராநாதபுரம் சேதுபதிகளால் ஆடி, மாசி மாதங்களில் ஆறாம்நாள் திருவிழாக்களும் இங்குதான் நடத்தப் பெறுகின்றன. மூன்றாவது வெளி

பிரகாரம் உலகத்திலேயே மிக நீண்டது என்ற பெருமை பெற்றது. தெற்கு வடக்குப் பிரகாரங்கள் ஒவ்வொன்றும் 435 அடி நீளமும் கிழக்கு மேற்குப் பிரகாரங்கள் 690 அடி நீளமும் உடையன. கிழக்கு மேற்கு உட்பிரகாரங்கள் ஒவ்வொன்றும் 649 அடி நீளமும், தெற்கு வடக்கு உட்பிரகாரங்கள் ஒவ்வொன்றும் 395 அடி நீளமும் உடையன. அவற்றின் உயரம் 22 அடி முதல் 7 1/2 அடி வரையுள்ளது. கோயிலின் முக்கிய சந்நிதியைச் சுற்றிலும் தனிப்பிரகாரங்கள் இருக்கின்றன. கிழக்கிலும் மேற்கிலும் உள்ளவை ஒவ்வொன்றும் 117 அடி நீளமும், தெற்கிலும் வடக்கிலும் உள்ளவை ஒவ்வொன்றும் 172 அடி நீளமும் உடையன. அவற்றின் அகலம் 14 1/2 அடி முதல் 17 அடி வரையுமாகும். ஆகவே கோயிலுள்ள பிரகாரங்களின் மொத்த நீளம் 3850 அடி. வெளிப்பிரகாரத்தில் 1212 தூண்கள் இருக்கின்றன. அவற்றின் உயர் தரையிலிருந்து மேல்தளம் வரை 30 அடி இவையே கோயிலில் மிக அழகிய சிற்பச் சிறப்புடையனவை. மிருதுவான கல்லால் கட்டப்பெற்றிருக்கின்றன. இந்தக் கட்டிடங்கள் உள்ளும் புறமும் எவ்விதமான புராதனக் கலையழகையும் விளைவிக்கவில்லையென்பது அவற்றின் சிற்ப அமைப்பிலுள்ள குறைபாடாகும். எனினும் அவை உள்ளத்தே ஒரு கவர்ச்சியை எழுப்புகின்றன. கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டாக திகழும் இந்த ஒரே கோயில்தான் உட்புற அழுகுடையது. அதன் புராதனக்கலை அமைப்பைப் பற்றி இவ்வளவுதான் சொல்லக்கூடும்" என்று இராநாதபுர மாவட்டக் கலெக்டராக இருந்த டாட்டன்ஹாம் துரை கூறுகிறார். போக்குவரத்து இன்றி எப்படி அவ்வளவு கற்களைக் கொண்டு வந்து கட்டினார்கள் என்பதை நினைக்கும்போது நம்மை அதிசயத்தில் ஆழ்த்தி விடுகின்றது. "திராவிட சிற்பக் கலையமைப்பின் அழகெல்லாம் முழுமையும் காணக்கூடிய கோயில் "இராமேசுவரம் கோயில்தான்" என்று பர்குவான் துரை எழுதுகிறேன். பொதுவாக இக்கோயில் அமைப்பும் கட்டடக் கலையழகு ஒருங்கே இணைந்தது என்பதாகவே யாத்திரிகர்கள் கருதுகின்றனர்.

# அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேசுவரம்.

## கோயில் வரலாறு

இராமாயண காலத்திலேயே தோன்றியுள்ள இக்கோயில் 12-ம் நூற்றாண்டு வரை கூரைக் கொட்டகையில் ஒரு துறவியின் பாதுகாப்பில் இருந்து வந்துள்ளது. அதன்பின் கடந்த பல நூற்றாண்டுகளில் பலரால் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதில் முதலிடம் பெறுவோர் இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களேயாவார்கள்.

கி.பி. 12-ம் நூற்றாண்டில் இலங்கை அரசர் பராக்கிரமபாகு என்பவர் இத்திருக்கோயிலில் மூலஸ்தானத்தை (கர்ப்பக்கிரஹம்) கட்டினார் என்பதற்குரிய சான்றுகள் உள்ளன. அதன்பின் பதினைந்தாவது நூற்றாண்டில் இராமநாதபுரம் அரசர் உடையான் சேதுபதி அவர்களும், நாகூரைச் சேர்ந்த வைசியர் ஒருவரும் 78 அடி உயரமுள்ள் மேற்குக் கோபுரத்தையும் மதில் சுவர்களையும் கட்டினார். மதுரையைச் சேர்ந்த செல்வந்தர் ஒருவர் அம்பாள் கோவில் பிரகாரம் மற்றும் சில திருப்பணிகளையும் செய்தார்.

பதினாறாம் நூற்றாண்டில் கோயிலின் தெற்கு இரண்டாம் பரிகாரத்தை இராமநாதபுரம் மன்னர் திருமலை சேதுபதி கட்டினார். அம்பாள் சன்னதி வாயிலில் தெற்குப் பக்கம் அவருடைய மகன் இரகுநாத சேதுபதியுடைய உருவச் சிலையும் உள்ளன. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இரவில் மாலை சூட்டி மரியாதை செய்யப்படுகிறது. பின்னர் அதே நூற்றாண்டில் மதுரை மன்னர் விசுவநாத நாயக்கன் கீழ் குறுநில மன்னராக இருந்த சின்ன உடையான் சேதுபதி கட்டத் தேவர் நந்தி மண்டபத்தையும் மற்றும் சில திருப்பணிகளையும் செய்தார். இங்கு உள்ள நந்தி (செங்கற் சுண்ணாம்பு) சுதையால் ஆக்கப்பெற்றது. இதன் நீள அகலங்கள் பின்வருமாறு.

நீளம் : 22 அடி அகலம் : 12 அடி உயரம் : 17 அடி

பதினேழாவது நூற்றாண்டில் தளவாய் சேதுபதி

அவர்களால் திருக்கோயிலின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள ராஜகோபுரத்தின் ஒரு பகுதி கட்டப்பட்டது.

பதினெட்டாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் அம்பாள் சன்னதியில் பள்ளியறையும், முன் மண்டபமும் இரவி விஜய ரெகுநாத சேதுபதி என்பவரால் கட்டப்பட்டது. பின்னர் அதே நூற்றாண்டில் முத்துராமலிங்க சேதுபதி அவர்களால் உலகப் பிரசித்த பெற்ற மூன்றாம் பிரகாரம் (1710-1770) கட்டி முடிக்கப்பட்டது.

மூன்றாம் பிரகாரத்தின் அமைப்பு

| | | |
|---|---|---|
| வெளிப்புறம் | கிழக்கு - மேற்கு - 690 அடி | |
| | வடக்கு - தெற்கு - 435 அடி | |
| உட்புறம் | கிழக்கு - மேற்கு - 649 அடி | |
| | வடக்கு - தெற்கு - 395 அடி | |

மொத்த தூண்கள் எண்ணிக்கை 1212

உயரம் 22 அடி 7 1/2 அங்

முத்துராமலிங்க சேதுபதி மற்றும் அவருடைய இரு அமைச்சர்கள் ஆகியோரது சிலைகள் மூன்றாம் பிரகாரம் மேற்கு வாயிலில் இருக்கின்றன. 1897க்கும் 1904க்கும் இடையே நாட்டுக்கோட்டை நகரத்தார் குடும்பத்தைச் சேர்ந்த தேவகோட்டை ஜமீன்தார் ஏ.எல்.ஏ.ஆர். குடும்பத்தினரால் திருப்பணி நிதி வசூல் செய்து 9 நிலைகளுடைய, 126 அடி உயரமான கிழக்குக் கோபரம் கட்டி முடிக்கப்பட்டது.

இதன்பின் 1907-1925 ஆண்டுகளுக்கிடையில் தேவகோட்டை ஏ.எல்.ஏ.ஆர். குடும்பத்தினர் மற்றும் அவர்களிடம் இருந்த திருப்பணி நிதி மூலமாகவும் கர்ப்பக்கிரஹத்தை திருப்பணி செய்தும், சுண்ணாம்புக் கற்களினால் கட்டப்பட்டிருந்த முதல் பிரகாரத்தை முழுவதும் கருங்கல்லினால் அமைத்து வெளிச்சம், காற்று வசதி, உண்டாகும்படி செய்தனர். 1925-ம் ஆண்டு அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் ஏ.எல்.ஏ.ஆர். குடும்பத்தினர் மற்றும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் நடத்தப்பட்டது. அதன்பின் 27-2-1947-ல் இரண்டாவது அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்

நடைபெற்றது. அடுத்து 5-2-1975-ல் மூன்றாவது மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. தற்சமயம் 5.2.2001-ல் நான்காவது மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

## இரண்டாம் பிரகாரம்

முதல் பிரகாரம் கருங்கலினால் கட்டப்படும்போது இரண்டாம் பிரகாரத்தையும் திருப்பணி செய்யும் நோக்கத்துடன் சுண்ணாம்புக் கற்களை இடித்து அப்புறப்படுத்தப்பட்டு கருங்கல்லினால் இரண்டாம் பிரகாரம் திருப்பணி வேலை தொடங்கி மேற்குப் பகுதி மற்றும் தெற்கு வாசல் மேற்குப் பக்கம் வடபகுதியிலும் வேலை நடைபெற்று நிறுத்தப்பட்டு விட்டது. அதன்பின் இரண்டாம் பிரகாரத்திருப்பணி நடைபெறவில்லை. எனவே மேற்படி இரண்டாம் பிரகாரம் முழுவதையும் கருங்கல்லினால் கட்ட உத்தேசித்து திருக்கோயிலில் திருப்பணி நிதி ஏற்படுத்தப்பட்டு மேற்படி நிதியிலிருந்து 1961 முதல் 1985 -ம் வருடம் வரை மேற்கண்ட இரண்டாம் பிரகாரம் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு இரண்டாம் பிரகாரம் மேற்குப்பகுதி முழுவதையும் மற்றும் வடபகுதி மற்றும் தென்பகுதியில் ஒரு பகுதியும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தற்போது பாக்கியுள்ள இரண்டாம் பிரகாரத் திருப்பணி முழுவதும் நிறைவேற்ற துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் பல ஆண்டுகளாக அடைத்து வைக்கப்பட்டு இருந்த இரண்டாம் பிரகாரத்தை பக்தர்கள் புனித நீராடச் செல்ல வசதியாக 8-4-2002ல் திறந்து விடப்பட்டு புழக்கத்தில் இருந்து வருகிறது. இதன்மூலம் தூய்மைப் பகுதியாக மூன்றாம் பிரகாரம் அமைந்துள்ளது.

பக்தர்கள் இந்த வாய்ப்பை கைவிடாமல் இயன்ற அளவு திருப்பணிக்கு நன்கொடை அளித்து இறைவன் திருவருளுக்குப் பாத்திரமாக வேண்டும். பக்தர்கள் இத்திருக்கோயில் திருப்பணி வேலைகளுக்கென வழங்கும் நன்கொடைகளுக்கு மைய அரசின் வருமானவரி விலக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திருக்கோயிலின் ராஜ கோபுரத்திற்கு முன் அமைந்துள்ள சேதுபதி மண்டபம் இராநாதபுரம் சேதுபதி அரச பரம்பரையில் தோன்றிய இராமநாத சேதுபதி அவர்களால் தனது சொந்த நன்கொடை மூலமாக ரூ.2,75,000/- மதிப்பில் முழுவதும் கருங்கல்லினால் 19-11-69-ம் நாளில் தொடங்கி 11-12-1974-ல் கட்டி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

பல நூற்றாண்டுகளாக கட்டி முடிக்கப்படாமல் மொட்டைக் கோபுரமாக உள்ள வடக்கு தெற்கு இராஜ கோபுரங்களை ஐந்து நிலைகளுடன் ரூ.2.70 கோடி மதிப்பீட்டில் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜெயேந்திர சுவாமிகள் உபயமாக கட்டிகொடுக்க மனமுவந்து இசைந்து பணியை துவக்கியுள்ளார்.

இத்திருக்கோயில் சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் தங்க ரதம் செய்யப்பட்டு 23.3.2001 அன்று துவங்கப்பட்டது. ஸ்ரீ அம்பாள் தங்க ரதத்தில் வைத்து புறப்பாடு செய்ய விரும்புவோர் ரூ.2000/- கட்டணம் செலுத்தி விரும்பிய நாளில் புறப்பாடு செய்யலாம்.

## வழிபாடு

காலை 5-00 மணிமுதல் இரவு 9-00 மணிவரை (பகல் 1-00 மணிக்கு மேல் மாலை 3-00 மணி வரைக்கும் தவிர) கோயில் திறந்திருக்கும் நாள்தோறும் பூஜைகள் நிகழ்கின்றன.

### பூஜா காலங்கள் விபரம்

| | |
|---|---|
| 1. பள்ளியறை தீபாராதனை | காலை 5-00 மணி |
| 2. ஸ்படிகலிங்க தீபாராதனை | காலை 5-10 மணி |
| 3. திருவனந்தல் தீபாராதனை | காலை 6-00 மணி |
| 4. விளா பூஜை | காலை 7-00 மணி |
| 5. கால சந்தி பூஜை | காலை 10-00 மணி |
| 6. உச்சிகால பூஜை | பகல் 12-00 மணி |
| 7. சாயரட்சை பூஜை | மாலை 6-00 மணி |
| 8. அர்த்தஜாம பூஜை | இரவு 8-30 மணி |
| 9. பள்ளியறை பூஜை | இரவு 8-45 மணி |

பள்ளியறைக்குச் சுவாமியை எழுந்தருளப் பண்ணுவதும். அம்பாள் கோயிலுள்ள பள்ளியறையில் சுவாமிக்கும் அம்பாளுக்கும் பூஜையும் இரவு 8-45 மணிக்கு மேல் 9-00 மணிக்குள் நடைபெறும்.

குறித்த நேரத்தில் நடைபெறும் இந்த கால பூஜைகளைத் தவிர யாத்திரிகர்கள் திருக்கோயில் அலுவலகத்தில் பெற்ற பல்வேறு வகையான அபிஷேகம் மற்றும் சிறப்பு பூஜைகளுக்கான சீட்டுக்களுக்கு, அர்ச்சகர்கள் தனி வழிபாடுகளும், செய்து வைப்பார்கள். பணம், தங்கம், வெள்ளி நகைகள், மற்றும் விலை மதிப்புள்ள பொருள்களை காணிக்கையாக செலுத்த யாத்திரிகர்கள் விரும்பினால் அவற்றைத் திருக்கோயில் பேஷ்கார் அலுவலகத்தில் செலுத்தினால் அவர் இறைவன் - இறைவி திருவடிகளில் அவற்றை வைத்து எடுக்க ஏற்பாடு செய்து, திருக்கோயில் கணக்கில் சேர்த்து, அவற்றிற்குரிய ரசீதுகளையும் கொடுப்பார்கள்.

நிலங்கள் முதலிய சொத்துக்களைப் பக்தர்கள் கோயிலுக்குத் தானம் செய்ய விரும்பினால், கோயில் நிர்வாக அதிகாரியுடன் தொடர்பு கொண்டு, தர்மகர்த்தாக்குழு, சட்ட நிபுணர் இவர்களின் அங்கீகாரம் பெற்று, பத்திரங்கள் எழுதிக்கொடுக்க ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அபிஷேகத்திற்கான கங்கை தீர்த்தம், செம்பு, பித்தளை, வெண்கலத்திலான பாத்திரங்களில் கொண்டு வரப்பட வேண்டும். அந்த தீர்த்த பாத்திரங்களுக்குரிய கட்டணத்தைச் செலுத்தினால் பேஷ்கார் அவற்றைப் பெற்றுக் கொள்வார். தகரம், இரும்பிலான பாத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பாத்திரங்களுக் குரிய கட்டணத்தோடும் பெற்றுக்கொண்டதைத் தெரிவிக்க சுய விலாசமிட்ட தபால் தலை ஒட்டிய கடிதத்துடன் அஞ்சல் அல்லது இரயில் மூலமாக கங்கா தீர்த்தம் அனுப்பலாம். பாத்திரங்களின் விலையோடு ரூ.15/- செலுத்தி கங்கா தீர்த்தம் கோயிலிலும் வாங்கிக் கொள்ளலாம். ஒவ்வொரு முக்கியமான சந்நிதிக்கும் நுழைவுவாயிலில் பக்தர்கள் பணம் போடுவதற்காக உண்டியல்

வைக்கப் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு மாதமும் அதிகாரிகள் பொதுமக்கள் முன்னிலையில் உண்டியல்கள் திறக்கப்பட்டு, அதிலுள்ள வருவாய் கோயில் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பெறும். மேலும் 23-02-2002 முதல் தினசரி பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப் படுகிறது. அன்னதானத்திற்கு நன்கொடை வழங்க விரும்புபவர்கள் அதற்குரிய உண்டியலில் காணிக்கைகளை செலுத்தலாம்.

## அபிஷேகம்

யாத்திரிகர்கள் குறித்த கட்டணங்களை முன்கூட்டியே செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொண்டால் கீழ்க்காணும் அபிஷேகங்கள் நடத்தி வைக்கப்பெறும்.

## அர்ச்சனை மற்றும் அபிஷேக விபரங்கள்

1. 1008 சகஸ்ரகலச அபிஷேகம்
2. 1008 சங்காபிஷேகம்
3. 108 அஷ்டோத்திர கலச அபிஷேகம்
4. 108 சங்காபிஷேகம்
5. ருத்ராபிஷேகம்
6. உபயாபிஷேகம்
7. கங்காபிஷேகம் (கங்கா தீர்த்தம் பாத்திரம் உள்பட)
8. கங்காபிஷேகம் (கட்டணம் மட்டும்)
9. பால் அபிஷேகம் (பால் நீங்கலாக 1 லிட்டருக்கு)
10. பன்னீர் அபிஷேகம் (பன்னீர் நீங்கலாக)
11. கோடித்தீர்த்தம் அபிஷேகம்
12. விபூதி அபிஷேகம் (500 கிராம் விபூதி நீங்கலாக)
13. சகஸ்ரநாம அர்ச்சனை
14. அஷ்டோத்ர அர்ச்சனை

அர்ச்சனைகளில் அஷ்டோத்திரம் (108) திரிசதை, (308) சகஸ்ரநாமம் (1008) என்ற மூன்று வகைகள் உண்டு. அபிஷேகங்கள், அர்ச்சனைகள், சேவைகள் முதலியவை பற்றிய விவரங்களைப் பிற்சேர்க்கையில் காணலாம். கட்டணங்களின் விவரங்களைக் கோயில் அதிகாரியிடம் தெரிந்து கொள்ளலாம்.

முன்கூட்டியே பணம் செலுத்தினால் பஞ்சமூர்த்தி உற்சவம், வெள்ளி ரதம் வீதி வலம் வருதல், தங்கப் பல்லக்கில் அம்பாளை முத்தங்கி, தங்கக் கவசம் சாத்தி எழுந்தருளச் செய்தல் தங்கரதத்தில் அம்பாளை எழுந்தருளச்செய்தல் முதலிய ஏற்பாடு செய்யப்பெறும். உற்சவம் முடிந்ததும் உபயதாருக்கு மாலை மரியாதை செய்யப்படும். சேவார்த்திகளின் வேண்டுதலை நிறைவேற்றிக்கொள்ள துலாபாரம் அமைக்கப்பட்டுள்ளது. தாங்கள் விரும்பும் பொருளை அதன் மூலம் வழங்கலாம். பிரார்த்தனை பூர்த்தி செய்யப் பழம், தேங்காய் கொடுக்கவும், காவடி, முடி, விவாகம், தொட்டில் முதலியவற்றுக்கான திருக்கோயில் அலுவலகத்தில் கட்டணங்கள் தெரிந்து கொண்டு முன்கூட்டி பணம் செலுத்திச் சீட்டுக்கள் பெற வேண்டும்.

## தீர்த்தங்கள்

கோயிலுக்குள் பல இடங்களில் 22 தீர்த்தங்கள் (பெரும்பாலும் கிணறுகள்) இருக்கின்றன. குளித்த நீர் கிணற்றுக்குள் போகவிடக் கூடாது. குளிப்பதால் உடலும் உள்ளமும் தூய்மையடையும் தீர்த்தங்களில் மருந்துச் சத்துப் பொருள்களுடன் புனிதத் தன்மையும் கலந்திருக்கிறது.

## திருக்கோயிலின் பிரகாரத்தில் உள்ள தீர்த்தங்களும் அவற்றின் மகிமையும்

| தீர்த்தத்தின் பெயர் | தீர்த்தம்உள்ள இடம் | தீர்த்தத்தின் மகிமை |
|---|---|---|
| 1. மஹாலெட்சுமி தீர்த்தம் | அனுமார்கோவிலுக்கு தெற்குப்புறம்உள்ளது | தர்மராஜன் ஸ்நானம் செய்து ஐஸ்வரியம் பெற்றது. |
| 2. சாவித்திரி தீர்த்தம் | அனுமார் கோவிலுக்கு மேல்புறம் உள்ளது. | காசிபர் மகாராஜா சாபம் நீங்கியது |
| 3. காயத்திரி தீர்த்தம் | மேற்படி | மேற்படி |
| 4. சரசுவதி தீர்த்தம் | மேற்படி | மேற்படி |
| 5. சக்கர தீர்த்தம் | மேற்படி | சூரியன் பொன்கைப் பெற்றது |
| 6. சேதுமாதவ தீர்த்தம் | மூன்றாம்பிரகாரத்தில் உள்ளநெப்பக்குளம் | லெக்ஷ்மி விலாசமும் சித்த சுத்தியும் பெறுவர். |

| | | |
|---|---|---|
| 7. நளதீர்த்தம் | மேற்படி | சூரிய தேஜசை அடைந்த சொர்க்க லோகபதவி அடைவர். |
| 8. நீலதீர்த்தம் | மேற்படி | சமஸ்ர யாக பலனையும் அடைந்து அக்னி யோக பதவியை அடைவார்கள் |
| 9. கவயதீர்த்தம் | மேற்படி | கற்பக விருட்சகவாசம் |
| 10.கவாட்ச தீர்த்தம் | மேற்படி<br>மேற்படி | நரகத்திற்குப் போக மாட்டார்கள் |
| 11. கந்தமாதன தீர்த்தம் | சேதுமாதவர் கோயில் பகுதியில் உள்ளது | மகா தரித்திரம் நீங்கி சகல ஐஸ்வரியமும் பெற்று பிரம்ம ஹத்தியாதி பாவ நிவர்த்திபெறுவர் |
| 12.பிரம்மஹத்திபாப விமோசன தீர்த்தம் | மேற்படி | பிரம்மஹத்தியாதி பாவங்கள் நிவர்த்தி |
| 13.சூரிய தீர்த்தம் | மேற்படி | திரிகால ஞானமும் அந்தந்த உலகப் பிராப்தியும் உண்டாகும். |
| 14.சந்திரதீர்த்தம் | மேற்படி | மேற்படி |
| 15.சாத்யமிர்த தீர்த்தம் | இரண்டாம் பிரகாரத்தில்உள்ளது. | புரூரூனு சக்கரவர்த்திக்கு சாபம் நீங்கியது. |
| 16.சிவதீர்த்தம் | மேற்படி | பைரவர் பிரம்ம ஹத்தி நிவர்த்தியானது |
| 17.சர்வதீர்த்தம் | மேற்படி | சுதிரிசனா பிறவிக் குருடும் நோயும் திரையும் பலமற்ற சரீரமும் நீங்கி வளமடைந்தது. |
| 18.சங்குத்தீர்த்தம் | கோவில் 2ம்பிரகாரத் தில் உள்ளது | வத்ஸ்நாப முனிவர் செய் நன்றி மறந்த பாவம் நீங்கியது |
| 19.கயாதீர்த்தம் | மேற்படி | மேற்படி |
| 20.கங்காதீர்த்தம் | மேற்படி | ஞானசுருதி ராஜன் ஞானம் பெற்றது. |
| 21.யமுனாதீர்த்தம் | மேற்படி | மேற்படி |
| 22.கோடி தீர்த்தம் | கோவில் முதல் பிரகாரத்தில் உள்ளது | ஸ்ரீ கிருஷ்ண பகவான் மாயனாகிய கம்ஸனை கொன்ற பாவம் நீங்கியது. |

இவைகளேயன்றி கோயிலுக்கு வெளியிலும் 31 தீர்த்தங்கள் இருக்கின்றன. அவை தேவிப்பட்டணம் (நவபாஷாணம்) திருப்புல்லாணி (தர்ப்பசயனம்) நீங்கலாக மண்டபம், பாம்பன் தங்கச்சிமடம், இராமேசுவரம் முதலிய இடங்களில் பரவலாக உள்ளன. அவை பழம்பெறுமையுடையனவாக இருந்த போதிலும் பெரும்பாலானவற்றிற்குச் செல்ல நல்ல வழி இல்லாததாலும் மண் மூடிவிட்டதாலும் அவை உள்ள இடங்கள் ஆக்கிரமிப்பினாலும் யாத்திரிகர்கள் அங்கெல்லாம் செல்வதில்லை.

## திருக்கோயிலுக்கு வெளியே உள்ள தீர்த்தங்கள்


| தீர்த்தத்தின் பெயர் | தீர்த்தம்உள்ள இடம் | தீர்த்தத்தின் மகிமை |
|---|---|---|
| 1. வேதாளவரத தீர்த்தம் | மண்டபத்திற்கு தெற்கே உள்ளது | சுதரிசனன்சாப விமோசனம் |
| 2. பாபவிநாச தீர்த்தம் | மேற்படி | மகாபாதகம் செய்த பிராமணனும் சூத்திரனும் மோட்சம் அடைந்தது |
| 3. பைரவதீர்த்தம் | பாம்பனில் உள்ளது | பிரம்மஹத்திதோஷ நிவாரணம் |
| 4. சுபிதீர்த்தம் | மேற்படி | அரம்பை சாப விமோசனம் |
| 5. சீதாகுண்டம் | தங்கச்சிமடத்திற்கு வடக்கே உள்ளது | இந்திரன் பிரம்மஹத்தி நீங்கியது |
| 6. மங்களதீர்த்தம் | மேற்படி | மனோஜவராஜன்ராஜ்யம் அடைந்தது |
| 7. அமிர்தவாபி தீர்த்தம் | ஏகாந்தராமசுவாமி கோயிலில் உள்ளது | அகஸ்தியர் சகோதரன் மோட்சம் அடைந்நந்து (சர்வ அபிஷ்டசித்தி) |
| 8. ரணவிமோசன தீர்த்தம் | ஏகாந்தராமசுவாமி கோயிலில் வடக்கே உள்ளது | சமஸ்தகடன்களும் நிவாரணம் |
| 9. லெக்ஷ்மண தீர்த்தம் | இராமேஸ்வரம் பாம்பன் ரஸ்தாவில் உள்ளது | பலராமனுக்கு பிரம்மஹத்தி நீங்கியது |

| | | |
|---|---|---|
| 10.ராமதீர்த்தம் | மேற்படி | தர்மராஜன்பொய் சொன்னபாவம் நீங்கியது |
| 11. சீதா தீர்த்தம் | மேற்படி | மேற்படி |
| 12.சுக்ரீவன்தீர்த்தம் | கந்தமாதனபல்வதம் செல்லும் பாதையில் உள்ளது | பூர்வஞானமும் சூர்யலோகபதவியும் அடைவர் |
| 13.அங்கத்தீர்த்தம் | மேற்படி | தேவேந்திர பதவி பிராப்தி |
| 14.ஜாம்பவதீர்த்தம் | மேற்படி | ஆயுள்விருத்தி |
| 15.கெந்தமாதன தீர்த்தம் | மேற்படி | வைகுண்டபிராப்தி |
| 16.தருமதீர்த்தம் | | |
| 17.வீமன்தீர்த்தம் | | |
| 18.அருச்சுணன் தீர்த்தம் | பஞ்சவாண்டவதீர்த்தம் | இஷ்டார்த்தசித்தி |
| 19.நகுலதீர்த்தம் | | |
| 20.சகாதேவதீர்த்தம் | | |
| 21.திரௌபதை தீர்த்தம் | பத்ரகாளிகோவிலுக்கு பக்கத்தில் உள்ளது | ஸ்த்ரீ புருஷ நேசமாய் தீர்க்காயுசு அடைவார்கள் |
| 22.பிரம்ம தீர்த்தம் | மேற்படி | பிரம்ம தேவனுக்கு சாப நிவர்த்தி |
| 23.அனுமகுண்ட தீர்த்தம் | மேற்படி | தர்ம மகாராஜன் புத்திர ப்ராப்தியை அடைந்தது |
| 24. அக்னிதீர்த்தம் | கோவிலுக்கு எதிர்புறம் உள்ள சமுத்திரம் | துஷ்பண்ணியவன் பிசாசின் பாதை நிவர்த்தியானது. |
| 25. நாகத்தீர்த்தம் | கோவிலுக்கு ஈசான திக்கில் தேவஸ்தான மடத்தில் உள்ளது | கங்கை முதலிய சகல தீர்த்தங்களும் பரிமளிக்கும் நிமித்தம் இதில் வாசம் செய்வதால் ஸ்நானம் செய்பவர் களுக்கு மோட்சசித்தியைத்தரும். |
| 26. அகஸ்திய தீர்த்தம் | கோவிலுக்கு ஈசான திக்கில் உள்ளது | கட்சிவான் மனோரமையை அடைந்தது. |
| 27. ஜடாயு தீர்த்தம் | தனுஷ்கோடிசெல்லும் பாதையில் உள்ளது | பிருகு, தந்தாத்ரேயர், துருவாசர், சுகர், சித்திசுத்தி அடைந்தது. |

| | | |
|---|---|---|
| 28. தனுஷ்கோடி தீர்த்தம் ஹரமும்மஹோ | தனுஷ்கோடியில் உள்ள சமுத்திரம் (இரத்தினாஹரம் மஹோ நதியும் ஒன்றாக கூடும் இடம்) மும் பரவாசு. | அசுவத்தாமன் நித்திரை செய்தவர்களை கொன்ற பாவமும், தர்ம குப்தன் பைத்திய என்ற பிராமணன் பிரும்ம ஹத்தி தோஷமும் சுமதி மகா பாதகமும், தராசராரன் சம்சர்க் பாதக தோஷமும் நிவர்த்தியானது. |
| 29. தேவதீர்த்தம் | ஸ்ரீ ராமசந்நிதிக்கு முன்னாள் இருந்தது | அசுரர்களை ஜெயிக்கும் நிமித்தம் இந்திரன் யாகம் பண்ணியது. |
| 30. கஜன்தீர்த்தம் சரவணதீர்த்தம் குமுதம் தீர்த்தம் ஹரன் தீர்த்தம் களகன் தீர்த்தம் பனகன் தீர்த்தம் நிவாரணம் | மேற்படி | இந்தத் தீர்த்தங்களில் ஆட சமஸ்த பாப நிவாரணம் |
| 31. விபூஷண தீர்த்தம் | மேற்படி | மனோதுக்கம் சமஸ்தரோகம் மகாதரித்திரம் துஷ்வப்னம் நிவர்த்தி |

## சேது

சேது தீர்த்தத்தில் நீராடுதலையும், இராமேசுவரத்தில் கோயிலை வழிபடுதலையும் ஒவ்வொரு இந்துவும் தம் வாழ்நாளில் செய்ய வேண்டிய கடமையாகக் கருதுகிறார்கள். சேது தீர்த்தத்தில் நீராடுதல் மிகப் புனிதமானதாக் கருதப்படுகிறது. இந்தியாவில் மிகவும் தெய்வீகத் தன்மையுடையதாகக் கருதப்படும் கோயில்களில் ஒன்று இராமேசுவரம். இராமபிரான் தன் பட்டாபிஷேகத்திற்குப் பிறகும் இக்கோயிலுக்கு வந்து வழிபட்டதாகச் சொல்லப்படுகிறது. பஞ்ச பாண்டவர்களும் பலராமரும் (கிருஷ்ண பகவானின் தமையனார்) புராண வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இந்தத் தலத்திற்கு வந்து வழிபட்டனராம். "இமசேது பரியந்தம்" "காசி இராமேசுவரம்" என்று சாதாரணமாக வழங்கும் பழமொழிகள் இராமேசுவரம்



கிழக்கு வாயில்




அருள்மிகு இராமநாத சுவாமி. அருள்மிகு பர்வதவர்த்தினி அம்பாள்



பல்லக்கு அலங்காரம்



ரிஷப வாகனங்களில் சுவாமியும், அம்பாளும்



அருள்மிகு நந்தி தேவர்

சேது இவற்றிந் பெருமையைக் காட்டுகின்றன.

இந்தியாவிலுள்ள இந்து ஆலயங்களில் வடக்கே பத்திரநாத்தும், கிழக்கே பூரிஜெகந்நாதம், மேற்கே துவாரகநாத்தும், தெற்கே இராமநாதம் இவை மிகவும் புகழ்பெற்றவை. இராமநாதம் ஒன்றே சிவத்தலம். மற்ற மூன்றும் விஷ்ணுத்தலங்கள் இராமபிரான் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தார் என்றும், அவர் சீதையுடன் புஷ்ப விமானத்தில் இலங்கையிலிருந்து அயோத்திக்கு செல்லும்போது இந்தத் தலத்தைக் காட்டினார் என்றும் இராமாயணம், சிவபுராணம், பத்மபுராணம் முதலியவற்றில் கூறப்பட்டிருக்கிறது. எவ்வாராயினும் இராமர் இந்த லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தார் என்பதில் கருத்து வேற்றுமை இல்லை. சேது தீர்த்தத்தில் நீராடி, இராமேசுவரத்தை வழிபட்டால் மக்கட்பேறு கிடைக்கும் என்று இந்துக்கள் எல்லோரும் நம்புகின்றனர். இராமேசுவரத்தில் உள்ளவர்கள் ஸ்ரீ சீதாபிராட்டி மணலால் லிங்கப் பிரதிஷ்டை செய்ததால் தங்கள் நிலங்களை எருதுகள் கொண்டு இப்போதும் உழுவதில்லை. மற்ற இடங்களில் இருப்பதுபோல இங்கே எண்ணெய் ஆட்டும் செக்குகள் இல்லை.

இராமநாதர் கோயிலுக்குள்ளிருக்கும் தீர்த்தங்களும் சந்நிதிகளும் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் படத்தில் காட்டப்பெற்றிருக்கின்றன. முக்கியமான ஒவ்வொரு சந்நிதியைப் பற்றிய சுருக்கமான குறிப்புகளைக் கீழே காணலாம்.

## இராமநாதசுவாமி சந்நிதி

இதுவே இராமநாதரின் மூலஸ்தானம். இங்குள்ள லிங்கம் சீதையால் ஆக்கப்பெற்று இராமபிரானால் புனிதமாக்கப்பெற்றது. முன் மண்டபத்திலுள்ள கேடகம் ஒன்றில் இராமன். சீதை, அனுமன், சுக்ரீவன் இவர்களுடைய விக்கிரகங்களைக் காணலாம். ஆஞ்சநேயர் இரண்டு கைகளிலும் லிங்கங்களுடனும், சுக்ரீவன் தலை வணங்கி வாய்பொத்தி இராமனிடம் அனுமன் திரும்பி வந்ததை தெரிவிக்கும் பாவனையுடனும் இருக்கின்றனர்.

வாயில்களுக்கும் மேல்தளத்திற்கும் பயன்படுத்தப்பெற்றுள்ள கருங்கற்கள் மிகவும் சிறந்த வேலைப்பாடுடையவை. சிறந்த வேலைப்பாடுடைய தூண்கள் கொண்ட முன் மண்டபம் மிகவும் அழகிய கவர்ச்சியுடையது.

மூன்று விமானங்களில் அனுமன், கந்தமாதன லிங்கம், அகஸ்திய லிங்கம் இந்த திருவுருங்களைக் காணலாம்.

### விசுவநாதர் சந்நிதி

அனுமன் கொண்டு வந்த விசுவலிங்கம் எழுந்தருளியுள்ள சந்நிதி, இராமநாதர் சந்நிதிக்கு வடபுறம் இருக்கிறது. கோவில் முதல் பூசை இந்தச் சந்நிதியில்தான் தொடங்கும்.

### விசாலாட்சியம்பிகை சந்நிதி

விசுவநாதரின் தேவியாரான விசாலாட்சியம்மை எழுந்தருளியுள்ளார். இந்த அம்பிகைக்கும் விசுவநாதருடன் சேர்ந்தே முதற் பூசை நடைபெறுகிறது.

### உற்சவ மூர்த்திகள்

மான் மழுவேந்திய இரு கரங்களும், கூப்பிய இரு கரங்களும் தொடையில் வால் ஒட்டியும் உள்ள நந்திகேசுவரன் விக்கிரகம் மிகவும் அற்புதமான் சிற்ப வேலைப்பாடுடையது. அது அவசியம் பார்க்கத்தக்கது.

### பர்வதவர்த்தினி சந்நிதி

இராநாதசுவாமியின் திருத்தேவியார் எழுந்தருளியுள்ளது. ஸ்ரீ ராமலிங்கரின் வலதுபுறம் தெற்கே அமைந்திருக்கிறது. மதுரையிலிருப்பதுபோல், சுவாமி சந்நிதிக்கு வலது பக்கம் அம்பிகை சந்நிதியிருப்பதால் மிகவும் மகத்துவம் உடையதாகப் பக்தர்கள் கருதுகின்றனர். இங்குள்ள ஸ்ரீ சக்கரம் அவசியம் பார்த்து வழிபடத்தக்கது.

### பள்ளியறை

இது அம்பாள் கோவிலுக்குள் வடகிழக்கு மூலையிலிருக்கிறது. ஒவ்வொரு இரவும் இராமநாதர் சந்நிதியிலிருந்து இராமநாதர் தங்க விக்கிரகம் இங்கு எழுந்தருளப் பெற்று, பள்ளியறை ஊஞ்சலில் அம்பிகையின்

தங்கத் திருவுருவத்தின் பக்கம் வைக்கப் பெற்று இரவில் சயன பூசை நிகழும். அதிகாலை அதே போன்று பூசை நடத்தி இராமநாதரை மூல ஸ்தானத்திற்கு எழுந்தருளச் செய்யப் பெறுகிறது. இந்தப் பூசைகள் தேவர்களும் விரும்பி காண வேண்டிய காட்சி. இரவில் அதிக நேரம் கண்விழித்தும் அதிகாலையில் எழுந்தும் பார்க்கத்தக்க இப்பூசைகள் பெறுதற்கரிய பேறு என்றே சொல்ல வேண்டும்.

### பெருமாள் சந்நிதி

அம்பிகை கோயிலின் வடமேற்கு மூலையில் ஆகாயத்தை நோக்கும் திருமுக மண்டலத்துடன் பள்ளிகொண்ட பெருமாள் சேவை சாதிக்கிறார்.

### சந்தான சௌபாக்கிய கணபதி சந்நிதி

இது அம்பாள் கோயிலின் தென் மேற்கு மூலையில் அமைந்திருக்கிறது.

### சுக்கிரவார மண்டபம்

ஆதிலட்சுமி, சந்தானலட்சுமி, கஜலெட்சுமி, தனலட்சுமி, தானிய லட்சுமி, ஜெயலட்சுமி, ஈஸ்வர லெட்சுமி, வீரலட்சுமி ஆகிய அஷ்டலட்சுமி களின் திருவுருவங்கள் இந்த மண்டபத்தில் கிழக்கு நோக்கிக் காணப்பெறுகின்றன. மேலும் இம்மண்டபத்தின் வடபுறமுள்ள எட்டுத் தூண்களில் மனோன்மணி, மகேந்திரி, கௌமாரி, இராஜ இராஜேஸ்வரி, இலட்சுமி, காளி, சாமுண்டி, தூவாரபாலிகை இவர்களின் திருவுருவங்கள் உள்ளன. தெற்குப் பக்கமுள்ள எட்டுத் தூண்களில் துவாரபாலிகை, சிவதுர்க்கை, மனோன்மணி, வாகீசுவரி, சேதுபதி, கடம்பத்தேவர், பிரதானி, புவனேசுவரி, அன்னபூரணி முதலிய திருவுருவங்கள் இருக்கின்றன.

### மகா கணபதி சந்நிதி

எப்போதும் கால பூஜைகள் இந்தச் சந்நிதியில்தான் தொடங்கும்.

### சுப்பிரமணியர் சந்நிதி

தென்னாட்டில் கார்த்திகேயர் அல்லது சுப்பிரமணியர் வள்ளி, தெய்வானை சமேதராகவே வழிபடப் பெறுகிறார்.

ஆனால், வடநாட்டில் சில இடங்களிலிருந்து வரும் பெண்கள், முருகன் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பேரழகுடைய பிரம்மச்சாரி என்று எண்ணி வழிபடுவதில்லை. இந்தியப் பாராளுமன்றத்தின் முதல் சபாநாயகர் மாவ்லங்கர் இங்கு வந்தபோது, அவர் மனைவியாரை இந்தச் சந்நிதியில் வழிபடச் செய்தது பெரும்பாடாகி விட்டது.

### சேதுமாதவர் சந்நிதி

இராமநாதர் சந்நிதிக்குப் பின்புறம் இரண்டாவது மூன்றாவது பிரகாரங்களுக்கிடையேயுள்ள இந்த சந்நிதியைப் பற்றி ஒரு கதை வழங்குகிறது. முன்னொரு காலத்தில் மதுரையை ஆண்ட புண்ணியநதி என்ற பாண்டிய மன்னன் சேதுவுக்கு யாத்திரையாக வந்து, கந்தமாதன பர்வதத்தில் தங்கி, இராமலிங்கத்தை வழிபட்டபின், விஷ்ணுபகவானைத் திருப்தி செய்தவதற்காக ஒரு யாகம் செய்தான். அவனுடைய பக்தியைச் சோதிக்க எண்ணிய விஷ்ணு, இலட்சியை ஓர் அனாதைச் சிறுமியாக அனுப்பினார். தனக்குப் பெண் மக்கள் இல்லாததால் அரசன் மனமிரங்கி அந்தச் சிறுமியைத் தன் பாதுகாப்பிற்கு எடுத்து கொண்டான், அரசனும் அரசி வித்தியாவதியும் அக்குழந்தையை நன்கு பராமரித்து வந்தனர். ஒரு நாள் விஷ்ணு, கங்கை நீர் நிரம்பிய பாத்திரங்கள் தொங்க விட்ட காவடியைத் தோளில் தாங்கியும், கரங்களில் குடை விசிறியேந்தியும் விபூதி உருத்திராட்சம் அணிந்தும், ஒரு கிழப் பிராமண- வடிவத்தில் வந்து இளவரசியிருந்த நந்தவனத்தில் திருட்டுத்தனமாக நுழைந்து, அவள் கையைப் பிடித்து இழுத்தார். பணிப் பெண்கள் ஓடோடியும் சென்று இதை அரசனுக்கறிவித்தனர். மன்னனும் கிழப்பிராமணனைச் சங்கிலியார் பிணைத்து இராமேசுவரம் கோவிலுக்குள் ஓர் இடத்தில் சிறை வைக்கச் செய்தான். அன்றிரவு, கிழப்பிராமணன் விஷ்ணுவாகவும், தன் வளர்ப்புப் பெண் இலட்சுமியாகவும் தோன்றக் கனவு கண்டான். விழித்தெழுந்து இளவரசி இருக்குமிடத்திற்குச் சென்றான். அந்த அறையிலும் அதே காட்சியைப் பார்த்தான். அடுத்த நாள் காலையில் இளவரசியை அழைத்துக்கொண்டு இராமேசுவரம் கோயிலுக்குப் போய் அங்கே விஷ்ணு சங்கிலியால்

கட்டப்பட்டிருப்பதைக் கண்டான். அரசன் தான் செய்த தவறை உணர்ந்து வருந்தினான். அரசன், விஷ்ணு இலட்சுமி இவர்கள் பேரில் வைத்த அன்பிற்கும் பக்திக்கும் அறிகுறியாக அந்தச் சங்கிலிகள் விளங்குகின்றன என்றும், இலட்சுமிதேவி அருகிருக்கத்தான் எப்போதும் சங்கிலியுடன் (சேதுமாதவர் என்ற பெயருடன்) அதே இடத்தில் இருப்பதாகவும் சொல்லி அரசனுக்கு ஆறுதலளித்தார். வெண்சலவைக் கல்லால் செய்யப்பெற்றதால் அந்தத் திருவுருவத்தைச் சுவேத (வெண்மையான) மாதவர் என்றும் அழைக்கின்றனர். இந்த சந்நிதிக்கருகிலுள்ள சேது மாதவ தீர்த்தத்தில் மூழ்கி, அவரையும் இலட்சுமியையும் வழிபடுகிறவர்களுக்கு, சேது தீர்த்தத்தில் நீராடியதால் உண்டாகும் எல்லா நலன்களும் கிடைக்கும் என்றும் தனுஷ்கோடியிலிருந்து மணல் கொண்டு வந்து அவர் திருமுன்பூசை செய்கிறவர்களுக்குக் காசியாத்திரை செய்த பயன் கிட்டும் என்றும் பகவான் அருள் பாலித்தார். ஆகவே, இராமேசுவரம் வைஷ்ணவர்களுக்கும் ஒரு சிறந்த யாத்திரைத் தலம்.

## இராமலிங்க பிரதிஷ்டை

புகழ்பெற்ற வெளிப்பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் இராமலிங்கப் பிரதிஷ்டை நிகழ்ச்சியை தத்ரூபமாகக் காட்சியளிக்கும் வகையில் சுதையுருவங்கள அமைக்கப் பெற்றிருக்கின்றன. இராமர், சீதை, இலக்குவர், இரண்டு கைகளிலும் லிங்கம் ஏந்திய அனுமன், இராமர் பட்டாபிஷேகத்தில் கலந்து கொண்ட சுக்ரீவன், விபீஷணன் முதலியவர்களின் உருவங்களைக் காணலாம். இது அவசியம் பார்க்கத் தகுந்தது. பார்வையாளர்களிடமிருந்து ஒரு சிறு தொகை கட்டணமாக வசூலிக்கப்பெறுகிறது.

## நடராஜர் சந்நிதி

உலகப் புகழ்பெற்ற வெளிப்பிரகாரத்தில் வடகிழக்கு மூலையில் நடராஜர் சந்நிதி அமைந்திருக்கிறது. இதனுள் மகாவிஷ்ணு உள்பட பல விக்கிரகங்கள் இருக்கின்றன. இங்கு உள்ள நடராஜ விக்கிரகங்கள் மற்ற கோயில்களில் சாதாரணமாகக் காணப்படுவதைக் காட்டிலும் பெரியனவாக

இருக்கின்றன. இச்சன்னதியில் ருத்ராட்ச மணிகளால் விமானம் அமைக்கப்பட்டுள்ளது கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது. சுவாமி மூலஸ்தானத்தைச் சுற்றியுள்ள உட்பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில், இன்னும் இரண்டு நடராஜர் திருவுருங்கள் உள்ளன. ஒன்றில் தலையின் இரு முயல்கன், மேல் நோக்கிய முகத்துடன் கால்களைப் பின்புறத்தில் நீட்டியும் காணப்படுகின்றன.

## ஆஞ்நேயர் சந்நிதி

கோயிலின் கிழக்கே நோக்கிய பிரதான வாசலில் நுழையும் போது வலதுகைப்புறம் ஆஞ்சநேயர் சந்நிதி தெற்கு நோக்கியிருக்கிறது. அவர் திருவுருவத்தில் சிவப்பு வண்ணம் பூசப்பெற்றிருக்கிறது. சிவப்புச் சந்தனம், தீர்த்தம், துளசிப் பிரசாதங்கள் இந்த சந்நிதியில் சாதிக்கப்பெறுகின்றன. ஆஞ்சநேயர் கைலாசத்திலிருந்து கொண்டு வந்த இரண்டாவது லிங்கம் இந்த கோயில் பிரகாரத்தில் இருக்கிறது.

## சேதுபதி மண்டபம்

இது கோவில் கீழ்வாசல் நுழைவாயிலில் முகப்பில் உள்ள மண்டபம், சிற்ப வேலைப்பாடுகளுடன் கருங்கல்லில் புதிதாக ரூ. 3 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. மிகவும் கவர்ச்சிகரமானது. இதில் வரலாற்று சிறப்பு பெற்ற ராஜா பாஸ்கர சேதுபதி அவர்களின் சிலை வடிக்கப்பட்டுள்ளது.

## அனுப்பு மண்டபம்

இந்த மண்டபம் வெளிப்பிரகாரத்தைத் தாண்டி கொடிமரம், நந்தி மண்டபம் இவற்றிக்குப் போவதற்கு முன்னால் பிரதான வாசலை ஒட்டியிருக்கிறது.

## மகாலட்சுமி சந்நிதி

அனுப்பு மண்டபத்திற்கு இடப்பக்கம் மகாலட்சுமி சந்நிதியிருக்கிறது.

## கல்யாண மண்டபம்

அம்மன் சந்நிதிக்கு முன்னாலிருக்கும் அந்த விசாலமான மண்டபத்தில் ஆடி மாதத்தில் (ஜுலை - ஆகஸ்டு)

திருக்கல்யாண வி[illegible] பெறும். சமயச் சொற்பொழிவுகளும், முக்கிய நிகழ்ச்சிகளும் இம்மண்டபத்தில்தான் நடைபெறும்.

## நந்தி மண்டபம்

நந்தி, செங்கல், சுண்ணாம்பு கலந்த கலவையால் அமைக்கப்பெற்றது. உருவம் மிகப் பெரியது. நந்தியின் இருபுறங்களிலும் மதுரை மன்னர்களான விசுவநாத நாயக்கர். கிருஷ்ணப்ப நாயக்கர் இவர்களின உருவங்கள் உள்ளன. நந்திக்குப் பின்புறம் கொடி மரம் இருக்கின்றது

## கந்தமாதன பர்வதம்

இராமேசுவரம் கோயிலுக்கு வடக்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் மண்மேட்டில் தளமுடைய மண்டபம் இருக்கிறது. இவ்விடத்திற்குப் போவதற்கு நல்ல சாலை இருக்கிறது. கோயிலுள் இராமபாதங்கள் உள்ளன. இந்தக் கட்டிடத்தின் உச்சியிலிருந்து பார்த்தால் நகரின் அழகிய தோற்றத்தையும் தீவின் சில பகுதிகளையும் காணலாம்.

## அருள்மிகு கோதண்டராமர் கோயில்

இராமர் எழுந்தருளியுள்ள இந்த அழகிய கோயில் இராமேசுவரத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. அண்மையில் இருப்புபாதை அழிந்து போய்விட்டமையால், இக்கோயிலுக்கு யாத்திரிகர்கள் வண்டிகளிலும் பஸ் மூலமும் செல்ல வேண்டும். விபீஷணன் சரணாகதியடைந்ததும் இலக்குவர் அவருக்கு முதல் பட்டாபிஷேகம் நடத்தி வைத்ததும் இந்த இடத்தில்தான் என்பர். இராமேசுவரத்தில் இராமலிங்கப் பிரதிஷ்டை விழா (மே - ஜூன்) நடைபெறும்போது, இராமேசுவரத்திலுள்ள இராமர் உற்சவமூர்த்தி, ஒரு தங்கக் கேடகத்தில் விபீஷண பட்டாபிஷேகத்திற்காக இங்கு எழுந்தருளச் செய்யப் பெறுகிறார். அதற்கு முந்நாள் இராமேசுவரம் கடைத்தெருவிலுள்ள திட்டக்குடி என்ற இடத்தில் இராவணவதம் நிகழும். பட்டாபிஷேகத்திற்கு மறுநாள் இராமேசுவரத்தில் இராமலிங்கப் பிரதிஷ்டை விழா நடைபெறும்.

## ஜடா தீர்த்தம்

பிறவி, மரணம், மூப்பு இவைகளால் ஆக்கிரமித்து வாழ்வில் ஈடுபட்ட புத்தியுள்ளவர்களுக்கு அஞ்ஞானத்தைப் போக்கடிப்பது ஜடா தீர்த்தத்தைத் தவிர வேறொன்றில்லை. உலகில் வீடு பேற்றை விரும்புகின்ற சிலர் சித்த சுத்தியையும் அடைய விரும்புகின்றவர்கள் சொல்லினால் வேதாந்தத்தைப் பூர்வபட்சம் என்னும் பெரிய மகரங்களை உடையதும் சித்தாந்தம் என்னும் திமிங்கலங்களோடு கூடியதும் ஆன வேதாந்தம் என்னும் சமுத்திரத்தில் விழுந்தவர்கள் அஞ்ஞானத்தை அடைகின்றனர். முதலில் எவர்கள் சித்தசுத்தியின் பொருட்டு வேதாந்தாத்தைப் படிக்கின்றனரோ அவர்கள் படித்தபின். கலக்கமடைகின்றனர். கலகமும் செய்கின்றனர். சித்தசுத்தியானது அதிக குழப்பம் உள்ள வேதாந்தத்திலிருந்து ஏற்படாது. ஆகையால், ஒ முனீந்திரங்களே; வேதாந்தத்தை நாங்கள் பெரிதாக எண்ணமாட்டோம். ஒ, தபிஸ்விகளே, சிறிய உபாயத்தால், நீங்கள் சித்த சுத்தியை விரும்புவீர்களாயின், உங்களுக்கு அடித்துக் கூறுவேன். ஜடா தீர்த்தத்தைச் சேவியுங்கள் என்று முன் ஒரு காலத்தில் எல்லோருடைய உபகாரத்திற்காக அறியாமையை நசிக்கச் செய்யும் இந்தத் தீர்த்ததைப் பரமசிவனார் கந்தமாதன பர்வத பகுதியில் நேரிடையாகவே நிர்மாணம் செய்தார். ராவணனைக் கொன்றபிறகு. ஒ, அந்தணர்களே, அறத்தில் வல்லோன் இராமன் ஜடைய எத்தண்ணீரில் கழுவினாரோ, அதற்கு ஜடா தீர்த்தம் என்று பெயர் வழங்கப்படுகிறது. கங்கையில் மூழ்குதல் 64,000 வருடங்கள் தவம் செய்வது. பிரகஸ்பதி சிம்ம ராசியில் புகும்போது கோதாவரியில் ஒரு ஸ்நானம் செய்வதற்குச் சமம். அவ்விதம் பிரகஸ்பதி சிம்மத்தை அடையும்போது ஆயிரம் ஸ்நானங்கள் கோமதியில் செய்தபலன் கிடைக்கிறது. ஏ, அந்தண சிரேஷ்டர்களே, ஜடா தீர்த்தத்தில் ஸ்நானம் செய்கின்ற மனிதர்களுச் சித்த சுத்தி உண்டாகிறது, பிறகு அறியாமை நரகமாகிறது. அஞ்ஞானம் அடைவார்கள், பிறகு அகண்ட சச்சிதானந்த பூர்ணனாக ஆகிறான்.

இவ்விஷயத்தை, பழமையான இதிகாசங்கள் விளக்குகின்றன. தந்தையான வியாசருக்கும் புதல்வனான சுகருக்கும் நடந்த சம்வாதரூபமான மிகப் பழமையான இதிகாசம் உதாரணமாகச் சொல்லப்படுகிறது. முன்னொரு காலத்தில் முனி சிரேஷ்டரும், திருமாலின் அவதாரமானவரும், வழி, வழி வந்த சிறப்பான அறிவை உடையவரும் எல்லா சாத்திரங்களின் பொருட்களை உணர்ந்தவரும் ஆன வியாச பகவானத் தலையாரக் கும்பிட்டுச் சுகர் பின்வருமாறு கேட்பார் - சுகர் சொல்கிறார். பெருமை பொருந்திய எல்லாம் உணர்ந்த ஐயா, மிக உயர்ந்த இரகசியத்தைச் சொல்லும் அந்தக்கரண சுத்தி உண்டாக வேண்டும் பெருமுனியே. என் நட்பினால் அந்த உபாயத்தைச் சொல்ல வேண்டும். வேதாந்தங்களும், இதிகாசங்களும், புராணங்கள் முதலியவை முழுதும் என்னால் உம்மிடமிருந்து அறியப்பட்டன. ஆனால், மனதைச் சுத்தி செய்யவில்லை. ஆகையால், எனக்கு சித்தசுத்தி எவ்விதம் உண்டாகுமோ அவ்விதம் சொல்ல வேண்டும். ஒ! முனிபுங்கவர்களே! இவ்விதம் சுகலால் கேட்கப்பட்ட வியாச பகவான் இரகசியத்தைச் சொன்னார்! எதனால் அஞ்ஞானம் அழியுமோ: வியாச பகவான் சொன்னார்:- சுகர், அஞ்ஞானம் என்னும் முடிச்சுக்களை ஒழிக்கும் இரகசியத்தை உனக்குச் சொல்வேன் மனிதர்களுக்கும் புத்தியின் சுத்தத்தைக் கொடுப்பதும் பிறவி முதலிய பயத்தின் நாசத்தையும் சொல்வேன், இராமேசுவரத்தில் மிகப் புனிதமான கந்தமாதனபர்வதத்தில் பாவத்தை நீக்கும் ஜடா தீர்த்தம் என்னும் புகழ் பெற்ற தீர்த்தம் உள்ளது. இதில் திருமாலான இராமன்தான் தனது ஜடையை சுத்தம் செய்து கொண்டானோ தசரதனின் மகனான பெருமை பொருந்திய இராமன் இத்தீர்த்தத்தின் பொருட்டு வரமளித்தான். அவை பின்வருமாறு:-

எவர்கள் இந்த மிகப் புனிதமான ஜடா தீர்த்தத்தை அடைந்து அதில் ஸ்நானம் செய்கிறார்களோ, அவர்களுக்கு மன சுத்தி உண்டாகும். வேள்வயல்லாமலும், ஞானமில்லாமலும் ஜெபமில்லாமலும் உபவாசமில்லாமலும் ஸ்நான மாத்திரத்தில், ஜடா தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதால்

மட்டும் 'புத்தி சுத்தி' மனிதர்களுக்கு உண்டாகிறது. ஜடா தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதால், எல்லா தானங்களுக்குச் சமமான புண்ணியம் உண்டாகும். இந்த ஸ்நானம் செய்வதால் கடக்க முடியாததையும் கடக்கிறான். புண்ணிய லோகங்களையும் அடைகிறான். மங்களமான நீரை உடைய ஜடா தீர்த்தத்தைத் தவிர வேறொன்றும் 'மனசுத்திக்கு' கிடையாது. இதைத் தவிர உயர்ந்த நியமனமும் கிடையாது. ஜெபமும் கிடையாது. உயர்ந்த தெய்வமும் கிடையாது. எல்லா உலகங்களிலும் 'பேற்றை' அடைவதும், புகழைக் கொடுப்பதும் புனிதமானவைகளுள் புனிதமாகவும், இந்த ஜடா தீர்த்தம் மிகப் புகழடைந்துள்ளது. ஒ, சுகனே, இப்பொழுது எல்லா பாவத்தையும் போக்கடிப்பதும், மங்களங்களுக்குள் மங்களமாக முன்பு பிருகு, வானர் தகப்பனான வருணனைக் குறித்து புத்தித் தூய்மையைக் கொடுக்கும் உபாயமான மிகப் புனிதமான நன்மையைக் கேட்டான். வருணன் அவன் பொருட்டு புத்தியின் சுத்தியை கொடுப்பதைச் சொன்னான். வருணன் சொன்னான். இராமேசுவரத்தில் புனிதமான 'கந்தமான பர்வதத்தின்' பகுதியிலுள்ள ஜடாத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தவதால் மட்டும் புத்தியின் சுத்தி உண்டாகிறது. நிச்சயம் என்று, வருணனின் மகனான பிருகு, உட்னே தகப்பனின் வார்த்தையால் ஜடா தீர்த்தத்தை அடைந்து, ஸ்நானம் செய்து புத்தி சுத்தியை அடைந்தான். அப்பொழுது 'பிருகு' நாசம் செய்த அஞ்ஞான கட்டத்தை உடையவனாய்க் கொண்டு அந்த சுத்தியினால் உண்டான அத்வைதம் ஆகிய நல்ல அறிவை உடையவனய் கொண்டு அந்த சுத்தியினால் உண்டான அத்வைதம்' ஆகிய நல்ல அறிவை உடையனவாய் கொண்டு தன் தகப்பனான வருணனின் உலகத்திற்கும் 'அகண்ட சச்சிதானந்த பூர்ணாகரனாகவும்' ஜடா தீர்த்தத்தில் குளித்துச் சடுதியில் மனத் தூய்மையை அடைந்து பிரமானந்தராக ஆனார். விஷ்ணுவின் அம்சமான 'தத்தாதிரேயரும்' இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால், சுகா! சுத்தமான மனதையுடையவனாக ஆகி "பிரம்ம சொரூபமாக" ஆனான். எவன் அஞ்ஞான நாசத்தை விரும்புகிறானோ, அவன் மிகப் புனிதமாக புண்ணியமான ஜடா தீர்த்தத்தில்

ஸ்நானம் செய்ய வேண்டும். சுகா, ஆகையால் நல்ல புத்தி உடையவனே, ஜடா தீர்த்ததிற்குச் செல்; மனத்தூய்மையைக் கொடுக்கக் கூடிய அதில் ஸ்நானம் செய்: இவ்விதம் தகப்பனான வியாசரால் சொல்லப்பட்ட மகனானசுகன். அப்பொழுது அந்தணர்களே; இராமேசுவரத்தில் பெரும் புண்ணியமான 'கந்தமாதன பர்வதத்தில்'' நல்ல சுத்தியைக் கொடுக்கும் ஜடா தீர்த்தத்தில் ஸ்நானம் செய்ய விரும்புகின்ற வனாகச் சென்றான். சுக முனிவர் ஜடா தீர்த்தத்தில் சங்கல்பத்துடன் ஸ்நானம் செய்ய மனத்தூய்மை அடைந்து அதனால் அறிவின்மையை நீக்கி, தன்னுடைய ஆத்தும் வடிவமான பரமானந்த வடிவை அடைந்தார். மனத் தூய்மையை விரும்புகின்ற அனைவரும் அந்தணர்களே, இந்த ஜடா தீர்த்தத்தில் பக்தியுடன் ஸ்நானம் செய்ய வேண்டும். காமதேனுவுக்குச் சமமான சுபமான ஜடாயு தீர்த்தம் இருக்கும்போது மக்கள் தாழ்ந்த, மற்றவைகளில் மோகித்துக் களிப்படைகிறார்களே. சுகத்தை விரும்புகிறவன் சுகத்தை அடைகிறான். இதில் ஸ்நானம் பண்ணுகிறவன் மட்டும் உண்மையில் அவைகளை அடைகிறான் என்று என்னால் சொல்லப்பட்டது. வேதத்தின் வார்த்தைப்படி மனிதர்களுக்கு தானத்தினாலும், தவத்தினாலும், விரதத்தினாலும், உபவாசத்தினாலும், ஜெபத்தினாலும், யோகத்தாலும் உண்டாகும். ஓ. அந்தணப் பெரியோர்களே இவைகள் செய்வதால் மட்டும் அந்தணர்களுக்கு மனத் தூய்மை உண்டாகும் என்பது நிச்சயம். ஜடா தீர்த்தத்தின் மகிமையை என்னால் சொல்வதற்கு இயலாது. அத் தீர்த்தத்தைச் சிவபிரான் உணர்கிறார். திருமாலும் உணர்கிறார். பிரமம்மனும் அவ்விதமே ஜடா தீர்த்தத்திற்குச் சமமான தீர்த்தம் இருந்ததுமில்லை, இருக்கபோவதுமில்லை. எவன் ஜடா தீர்த்ததின் கரையில் க்ஷேத்திர பிண்டத்தை போடுகிறானோ அவனுக்கு 'கயா சிரார்த்தத்திற்கும்' சமமான புண்ணியத்தை அடைகிறான். இதில் சந்தேகம் வேண்டாம். ஜடா தீர்த்தத்தில் மனிதன் ஸ்நானம் செய்வதால் பாவத்தினால் அழுக்கடைவதில்லை. தரித்திரத்ரையும் அடைவதில்லை. நரகத்தையும் அடைவதில்லை, சூதர்

சொல்லுகிறார்:- இவ்விதம், ஒ அந்தணர்களே, ஜடா தீர்த்தத்தின் மகிமை உங்களுக்குச் சொல்லப்பட்டது. எதில் வியாசரின் மகனும், யோகியுமான சுகர், பாவத்தைப் போக்கி மனத் தூய்மையையும் அத்வைத ஞான சாதனத்தையும் அடைந்தாரோ எவன் இந்த அத்தியாயத்தை ஒருமித்த மனத்துடன் படிக்கிறானோ அல்லது கேட்கின்றானோ அவன் பாவத்தை நீக்கி, வைகுண்ட பதவியை அடைகிறான் என்று காந்த மகாபுராணத்தின் எண்பத்தோராயிரம் செய்யுள் மூன்றாவதான பிரும்ம கண்டத்தில் உள்ள 'சேது' மகாத்மியத்தில் ஜடா தீர்த்தப் புகழ்ச்சியில் சுகரின் 'சித்த சுத்தி' பரிவனம் என்ற இருபதாவது அத்தியாம் முற்றும்.

இந்தப் புண்ய தீர்த்த ஸ்தலம், இராமேசுவரத்திலிருந்து தெற்கே 3 மைல் தொலைவில் உள்ளது.

## தனுஷ்கோடி அருள்மிகு விநாயகர் கோயில்

தனுஷ்கோடியில், இராமேசுவர்த்திற்குச் சம்பந்தப்பட்டது. இந்த விநாயகர் கோயில் ஒன்றுதான் நாட்டாண்மைக் கழகத் தங்கும் விடுதி, வெங்கடராயர் சத்திரம், தஞ்சாவூர் அரசர் சத்திரம், இரயில் நிலைய உணவுச்சாலை முதலியவை கடும்புயல் வீசி அழிந்த காரணத்தால் பயனற்று போயின. தனுஷ்கோடிக்குச் செல்லும் இருப்புப் பாதையும் அழிந்து போய்விட்டது. இராமேசுவர்த்திலிருந்து சேதுவுக்கு படகுகள் மூலமும் போகலாம். இப்போது விநாயகர் திருவுருவங்கள் இராமேசுவரத்தில் இருக்கின்றன.

## திருவிழாக்கள்

திருவிழா விவரப் பட்டியல் ஒன்றன் பின் இணைப்பாக உள்ளது. மாசி மாதத்தில் (பிப்ரவரி - மார்ச்) மகா சிவராத்திரி. வைகாசி - ஆனியில் (மே - ஜுன்) இராமலிங்கப் பிரதிஷ்டை ஆடியில் (ஜுலை - ஆகஸ்டு) திருக்கல்யாணம், தைப்பூசத்தில் (ஜனவரி - பிப்ரவரி) கோயிலுக்கு மேற்கேயுள்ள இலட்சுமண தீர்த்தமான திருக்குளத்தில் இரவு தெப்பம். இவை கோயிலில் நடைபெறும் முக்கியமான திருவிழாக்கள், பல ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் அர்த்தோதயம், மகோதயம் புண்ணிய காலத்தில், இராமேசுவரத்திலிருந்து பஞ்சமூர்த்திகள்

(விநாயகர், இராமநாதர், பர்வதவர்த்தினி, முருகன், சண்டேசுவரர்) அக்னிதீர்த்தத்திற்கு தீர்த்தவாரி செய்வதற்காக எழுந்தருளச் செய்யப் பெறுவர்.

## தங்கும் விடுதிகள்

இராமேசுவரத்திலுள்ள தங்கும் விடுதிகளைக் காட்டும் பட்டியல் ஒன்று பிற்சேர்க்கையாக இருக்கிறது. கோயிலைச் சார்ந்த விடுதிகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கோயில் அலுவலர்கள், தங்குவதற்கும் வழிபாட்டிற்கும் யாத்திரிகர்களுக்கும் வேண்டிய உதவிகளைச் செய்வார்கள். இதற்காக தொலைபேசி எண் 21292 முன்பதிவு அலுவலகம் செயல்படுகிறது.

## திருப்புல்லாணி

இராமேசுவர வழிபாட்டிற்கு பின் யாத்திரிகர்கள் திருப்புல்லாணி அல்லது தர்ப்பசயனத்துக்குப் (ஆதிசேது) போக வேண்டும். இது இராமநாதபுரம் இரயில் நிலையத்திலிருந்து சுமார் 10கி.மீட்டர் தொலைவில் இருக்கிறது. ஆழ்வார்களால் பாடல் பெற்ற சிவத்தலமான இராமேசுவரத்தைப் போல், திருப்புல்லாணியும் ஆழ்வார்களால் மங்களசாசனம் செய்யப்பெற்று 108 திவ்விய தேசங்களில் ஒன்று. இந்த இடத்தில் இராமபிரான் தர்ப்பை புல்மேல் படுத்திருந்ததாகவும், கடலரசனான வருணன் வர காலம் தாழ்ந்ததால் அவன் மேல் கோபம் கொண்டு அவன் கர்வத்தை அடக்கி, பின் அவன் உதவி கொண்டு சேது அணையைக் கட்டினார் என்றும் சொல்லப்படுகிறது. இலங்கைமேல் போர்தொடுக்கக் கடலைக் கடப்பதற்குமுன் இவ்விடத்தில் மற்றவர்களுடன் ஆலோசனை நடத்தினார் என்றும் கருதப்படுகிறது.

## தேவிப்பட்டிணம் அல்லது நவபாஷாணம்

இது ஒரு கடற்கரை ஊர். இங்கு நவக்கிரகங்களைக் குறிக்கும் ஒன்பது கற்களை இராமர் ஸ்தாபித்திருக்கிறார். இது இராமநாதபுரத்திலிருந்து 15கி.மீ. தொலைவில் இருக்கிறது. இவ்வூரில் தேவியினுடைய கோயில் ஒன்றும் உண்டு.

முதல் சேதுபதிக்கு இராமபிரான் முடிசூட்டும் போது அவன் அமர்ந்திருந்த கல் வைக்கப் பெற்றுள்ள இராமநாதபுரம் இராமலிங்க விலாச மாளிகையைப் பார்த்தால்தான் இராமேசுவர சேதுபதி யாத்திரை பூர்த்தியானதாகக் கருதப்படும். மிகப் பழங்காலந்தொட்டே சேதுபதிகள் இராமேசுவரத்துடன் தொடர்பு உடையவர்கள். பாண்டிய மன்னர்கள் கடற்கரைப்பகுதிகளின் முழு உரிமைகளையும் சேதுபதிகளுக்கு அளித்தனர். சேதுபதிகளும் இராமநாத சுவாமியைத் தங்கள் குல தெய்வமாகப் போற்றி வந்துள்ளனர்.

## நிர்வாகம்

இராமேசுவரம் கோயில் நிர்வாகம் 1883-ம் ஆண்டு வரையில் தொடர்ந்து வேளாளத் துறவிகளிடம் இருந்தது. அந்தப் பரம்பரை மறையவே மதுரை மாவட்ட நீதிபதி அந்த நிர்வாகத்தை மேற்கொண்டு, ஒரு ரிசீவர் உதவியுடன் நடத்தி வந்தார். பின்னர் 1853-ம் ஆண்டு ஒ௦-ஆவது சட்டத்தின்படி கோயிலுக்கு மேற்பார்வையாளர்களைச் சில காலம் வரை நியமித்திருந்தார். கடைசியாக 1912-ல் இராமநாதபுரம் துணை நீதிபதி ஒரு திட்டம் வகுத்தார். அதன்படி ஐந்து ஆண்டு காலம் பதவி வகிக்கக்கூடிய ஐந்து பேர்களடங்கிய குழு ஒன்று அமைக்கப்பெற்றது. அதில் இராமநாதபுரம் சேதுபதியும் தேவகோட்டை அள.அரு. குடும்பத்தினர் ஒருவரும் இடம் பெற வகை செய்யப் பெற்றது. அந்தத் திட்டமும் மாற்றப் பெற்று 1959-ம் ஆண்டு அறநிலையச் சட்டத்தின் கீழ் தர்மகர்த்தாக் குழு ஒன்றும் உதவி ஆணையர் நிலையிலுள்ள ஒரு நிர்வாக அதிகாரியும் நியமிக்கப் பெற்றனர். கோயிலில் வேலை பார்க்கும் எவருக்கும் கோயில் உத்தியோகங்களிலோ அல்லது வருவாயிலோ எவ்விதமான உரிமையும் கிடையாது. தற்போது திருக்கோயிலின் நிர்வாகம் இணை ஆணையர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. திருக்கோயில் அலுவலக தொலைபேசி எண் : 21223, 21224

## வருவாய்

நில சம்பந்தப்பட்ட சட்டங்களால் கோயிலின் வருவாய் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டது. அரசாங்கம் கொடுக்கும்

தஸ்திக் தொகைகள் கோயிலுக்குச் சொந்மான நிலங்களின் விளை பொருட்கள் பக்தர்களின் கட்டளைகள். காணிக்கைகள், யாத்திரிகர்கள் சேவைகளுக்காகச் செலுத்தும் கட்டணங்கள் தங்கும் விடுதி வாடகை இவைகளே இப்போது கோயிலுக்கு முக்கிய வருவாய் இனங்களாகும். தற்போது சராசரி ஆண்டு வருமானமாக 3கோடி ரூபாயைக் கொண்டு, கோயில் நிருவாகத்தையும் திருப்பணி வேலையையும் திருப்தியாய் நடத்தப் பற்றாக்குறையாவே உள்ளது. இதை உணரும் அன்பர்கள் மனமுவந்து அளிக்கும் நன்கொடைகளை ஆலய நிர்வாகிகள் அன்புடன் ஏற்றுக் கொள்வார்கள். அளித்தவர்கள் ஸ்ரீ பர்வதவர்த்தினி சமேத ஸ்ரீ ராமநாதர் திருவருட்குப் பாத்திரமாவார்கள்.

## பிற்சேர்க்கை
## அபிஷேகக் கட்டணம்

சுவாமிக்கும் அம்பாளுக்கும் அபிஷேகம் நடத்துவிக்க விரும்பும் அடியார்கள் கீழ்க்கண்ட கட்டண விகிதப்பட்டி தமது விருப்பம்போல் கட்டணம் செலுத்தி நடத்துவித்து மகிழலாம்.

## ஆலயத்தில் நடத்தப்பெறும் அபிஷேக அர்ச்சனைகளுக்குரிய கட்டணங்கள் விபரம்

### அபிஷேகங்கள்

| | | |
|---|---|---|
| 1. | 1008 சகஸ்ர கலச அபிஷேகம் | ரூ. 4,000/- |
| 2. | 1008 சங்காபிஷேகம் | ரூ. 4,000/- |
| 3. | 108 கலச அபிஷேகம் | ரூ. 750/- |
| 4. | சங்காபிஷேகம் (108 சங்குகள்) (நெய்வேத்தியத்துடன்) | ரூ. 750/- |
| 5. | ருத்ராபிஷேகம் | ரூ. 600/- |
| 6. | உபயாபிஷேகம் (பஞ்சாமிர்தம்) | ரூ. 500/- |
| 7. | கங்காபிஷேகம் (கங்கா தீர்த்தம் பாத்திரம் உள்பட) | ரூ. 15/- |

8. கங்காபிஷேகம் செய்ய பாத்திரம் ரூ. 10/-

9. காலபூஜையில் சிறப்பு தரிசனம் செய்ய ரூ. 50/-

10. பால் அபிஷேகம் (பால் நீங்கலாக 1 லிட்டருக்கு) ரூ. 25/-

11. ஸ்படிகலிங்கம் அபிஷேகம் தரிசனம்
நபர்1க்கு ரூ. 10/-
சிறப்பு தரிசனம் நபர் 1க்கு ரூ. 50/-

12. பன்னீர் அபிஷேகம் (பன்னீர் நீங்கலாக) ரூ. 25/-

13. சிறப்பு நுழைவுக்கட்டணம் நபர் 1க்கு
சுவாமி சன்னதி ரூ. 15/-

14. சிறப்பு நுழைவுக்கட்டணம் நபர் 1க்கு
அம்பாள் சன்னதி ரூ. 15/-

15. கோடித்தீர்த்தம் அபிஷேகம் ரூ. 25/-

16. விபூதி அபிஷேகம் ரூ. 25/-

## அர்ச்சனை

1. ஸ்ரீ இராமநாதசுவாமிக்கு
சகஸ்ரநாம அர்ச்சனை ரூ. 200/-

2. ஸ்ரீ இராமநாதசுவாமிக்கு அஷ்டோத்ர
அர்ச்சனை ரூ. 3/-

3. ஸ்ரீ அம்பாளுக்கும் இதர சந்நிதிகளுக்கும் ரூ. 3/-

4. கோடி தீர்த்தம் நீங்கலாக கோவிலுக்குள்
உள்ள எல்லா தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்ய
நபர் ஒன்றுக்கு நுழைவு கட்டணம் ரூ. 5/-

5. கோடி தீர்த்தம் நீராட நுழைவு கட்டணம் ரூ. 1/-

## இதர டிக்கட்டுகள் விபரம்

1. ருத்ரஜபம் செய்த நபர் 1க்கு ரூ. 10-00

2. லெக்ஷ்மண தீர்த்தத்தில் ஸ்நானம்
செய்ய நபர் 1க்கு ரூ. 1-00

3. கோடி தீர்த்தம் பாத்திரத்தில் எடுத்து போக
பாத்திரம் 1க்கு (பாத்திரம் நீங்கலாக) ரூ. 3-00

## இதர பூஜைகள்



1. காலம் ஒன்றுக்கு பூஜை செலவு ரூ. 500/-
2. ஸ்ரீசக்ர ஸ்பெஷல் பூஜை செலவு ரூ. 101/-
3. மூலஸ்தான அம்பாளுக்கு தங்கக் கவசம் சாத்துபடி செய்ய ரூ. 101/-
4. மூலஸ்தானம் ஸ்ரீ இராமநாத சுவாமிக்கு தங்க கவசம் நாகாபரணம் சாத்துபடி செய்ய ரூ. 101/-

## உற்சவங்கள்

1. வெள்ளி ரத உத்ஸவம் ரூ. 6500/-
2. பஞ்சமூர்த்தி உத்ஸவம் ரூ. 5000/-
3. ஸ்ரீ அம்பாளுக்கு அலங்காரம் செய்து தங்கப் பல்லக்கில் மூன்றாம் பிரகாம் சுற்றிவர ரூ. 2000/-
4. தங்கரதம் உலா வர ரூ. 2000/-

மேற்படி உற்சவங்கள், விசேஷ அலங்காரங்கள் செய்ய விரும்புவர்கள், திருக்கோயிலார் முன் அனுமதி பெற்று டிக்கெட் பெற்றுக் கொள்ள வேண்டியது, திருக்கோயிலாரின் சௌகரியத்தை அனுசரித்து நடத்தி வைக்கப்படும்.

## நிரந்தர கட்டளை

1. ருத்திராபிஷேகம் செய்ய ரூ. 6000/-
2. ஒரு கால பூஜை நடத்த ரூ. 5000/-
3. ருத்திரஜபம் செய்து கங்காபிஷேகம்செய்ய ரூ. 1500/-
4. கங்காபிஷேகம் மட்டும் செய்ய ரூ. 500/-
5. சகஸ்ரநாம கோடி அர்சனை செய்ய ரூ. 2500/-
6. இலவச பிரசாதம் வழங்கும் திட்டம் ரூ. 6000/-
7. தீபக்கட்டளை ரூ. 1000/-
8. தங்கரத புறப்பாட்டுக் கட்டளை ரூ. 20,000/-
9. அன்னதானக்கட்டளை ரூ. 30,000/-

குறிப்பு : மேற்படி தொகை வட்டி வருவாயிலிருந்து மேற்கண்ட கட்டளைகள் நிரந்தரமாக குறிப்பிட்ட நாளில் நடத்தி பிரசாதம் அனுப்பபடும்.

ரூ. 6000/- செலுத்தினால், அதனை நிரந்தர் முதலீடு செய்து அதனுடைய வட்டியிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் குறிப்பிட்ட தினத்தில் ருத்ராபிஷேகம் ஸ்ரீ இராமநாத சுவாமிக்குச் செய்து அருட்பிரசாதம் அனுப்பப்படும். அவ்வாறே ரூ.500/- செலுத்தினால் ஸ்ரீ இராமநாதசுவாமிக்கு குறிப்பிட்ட தினத்தில் கங்காபிஷேகம் செய்து அருட்பிரசாதம் அனுப்பப்பட்டும். ரூ. 5,000/- செலுத்தினால் ஒரு கால பூஜை ஸ்ரீ இராமநாதசுவாமிக்கு நடத்தி பிரசாதம் அனுப்பி வைக்கப்படும். இக்கோயில் திருப்பணிக்கு நன்கொடை அளிக்கும் தொகைக்கு வருமான வரி விலக்கு உண்டு.

பக்தப் பெருமக்கள் கோவிலுக்கு வழங்கும் காணிக்கைகளை யார் கையிலும் கொடுக்காமல் நேரிடையாக சந்நதிகள் முன்பு வைக்கப்பட்டுள்ள உண்டியலில் பெட்டிகளிலேயே தங்கள் கைகளினாலேயே போடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இனிய வழிபாடு செய்வதற்கும், நலமுறத் தங்குவதங்கும் ஸ்ரீ இராநாதசுவாமி தேவஸ்தான நிர்வாக அலுவலரை அனுகவும்.

குறிப்பு : மேற்படி அபிஷேக நெய்வேத்திய சாமான்களுக்கு தேவஸ்தானத்தின் திட்டத்திற்குத் தக்கபடி டிக்கட்டுகள் கொடுக்கப்படும்.

மேற்கண்ட அபிஷேகங்கள் ஸ்ரீ இராமநாதர், விசுவநாதர் பர்வதவர்த்தினி அம்மை, விசாலாட்சி அம்மை ஆகிய தெய்வங்கட்கு நடக்கும்போது பால், தேன், சந்தனம், பஞ்சாமிர்தம் ஆகியவையும் அபிஷேகப் பொருள்களாக இருக்கும் கோயிலில் நாள் தோறும் நடைபெறும் விழா பூஜை காலசந்தி, உச்சிகாலம், சாயங்கால பூஜை, அர்த்தசாமம் ஆகிய வழிபாட்டு காலங்களிலும் இத்தெய்வங்கட்குப் பால், தேன், சந்தனம், பஞ்சாமிர்தம் ஆகியவை அபிஷேகம் செய்யப்படும். அபிஷேகம் முடிந்தவுடன் அதை நடத்து வித்தவர்கள் பெற்று கொள்ளலாம். மடைப்பள்ளி அம்மன்

சந்நிதி வாசலுக்கு அருகில் இருக்கிறது. பஞ்சாமிர்த அபிஷேகத்திற்கும் ருத்திராபிஷேகத்திற்கும் கங்கை நீர் கோயில் அலுவலகத்திலிருந்து கொடுக்கப்படும். இவ்விலைத் தொகை அபிஷேகங்களுக்காகச் செலுத்தும் கட்டணத் தொகையில் அடங்கியதே. அர்ச்சனை செய்ய விரும்புவோர் மேற்கண்ட முறையிப்படி கட்டணங்கள் கொண்ட அர்ச்சனை சீட்டுப் பெற்று அர்ச்சகரிடம் தேங்காய், பழம் முதலியவற்றோடு கொடுக்கவேண்டும்.

### 1. மாதவிழாக்கள் - கார்த்திகை நாட்கள்

சுப்பிரமணியரை (கார்திகேயன்) மயில் வாகனத்தை எழுந்தருளச் செய்து இரவு 8-00 மணிக்குமேல் 9-00 மணிக்குள் வீதி உலா வருதல்.

### 2. பட்டவிழாக்கள் - பிரதோஷங்கள்

மாலை 5-00 மணிக்குமேல் 6-00 மணிக்குள் இராமநாத சுவாமியை ரிஷப வாகனத்தில் எழுந்தருளச் செய்து மூன்றாம் பிரகாரத்தில் வலம் வருதல்.

### 3. வார விழாக்கள் - வெள்ளிக்கிழமை

இரவு 8-00 மணிக்குமேல் தங்கப்பல்லக்கில் பர்வதவர்த்தினி அம்பிகை, மூன்றாம் பிரகாரத்தில் வலம் வருதல்.

கீழ்க்காணும் நாட்களில் பஞ்சமூர்த்தி உற்சவம் நடைபெறும்.

### 4. சிறப்பு விழாக்கள்

(அ) சங்கராந்தி தை (புஷ்ய) மாத முதல் நாள்

(ஆ) சித்திரை ஆண்டுப்பிறப்பு சித்திரை முதல் நாள்

(இ) மகா கிருத்திகை (திருக்கார்த்திகை நாள்)

(ஈ) தெப்போற்சவம் - தை மாத பௌர்ணமி பஞ்சமூர்த்தி புறப்பாடு

(உ) வைகுண்ட ஏகாதசியன்றும், ஸ்ரீ ராமநவமியன்றும் இராமருக்கு உற்சவம் உண்டு.

(ஊ) ஆடி அமாவாசை, தை அமாவாசை நாட்களில் கோதண்டராமர் கருட வாகனத்தில் அக்கினி தீர்த்தத்திற்கு எழுந்தருளித் தீர்த்தம் கொடுப்பர்.

## திருவிழாக்கள்

| எண் | விழா | தொடக்கம் | முடிவு | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | மகாசிவராத்திரி (பார்க்க வேண்டியவை) ரிஷப வாகன தரிசனம் | மகாசஷ்டி கிருஷ்ணபட்சம் மாசி (பிப்ரவரி, மார்ச்) | மகா கிருஷ்ண அமாவாசை | 10 நாட்கள் |
| 2. | வசந்தோற்சவம் | வைகாசி சுக்கில சஷ்டி-வைகாசி (மே-ஜுன்) | வைசாக பௌர்ணமி | 10 நாட்கள் |
| 3. | இராமலிங்கப் பிரதிஷ்டை உற்சவம் (பார்க்கத் தகுந்தது) ரிஷப வாகனம் | ஜேஷ்ட சுக்கில சுத்த சஷ்டி, ஆனி (மே-ஜுன்) | அஷ்டமி | 3 நாட்கள் |
| 4. | திருக்கல்யாணம் (பார்க்கத் தகுந்தது) ரிஷப வாகனம் வெள்ளி ரதம் | ஆஷாடபகுள கிருஷ்ணாஷ்டமி (ஜுலை -ஆகஸ்ட்) | சிராவண சுத்தம் | 17 நாட்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | தபசு நாள் தங்கப் பல்லக்கில் சயன சேவை திருக்கல்யாணத் திருநாள் | | | |
| 5. | ந்வராத்திரி விழா (தசரா) (விஜயதசமி நாள்) | பாத்ரபத சுத்த சுக்கில பிரதமை புரட்டாசி (செப்டம்பர்- அக்டோபர்) | தசமி | 10 நாட்கள் |
| 6. | கந்த ஷஷ்டி (சஷ்டி நாள்) | ஆஸ்விஜ சுத்த சுக்கில பிரதமை ஐப்பசி (அக்டோபர் -நவம்பர்) | ஆஸ்விஜ சுத்த சஷ்டி | 6 நாட்கள் |
| 7. | ஆருத்திரா தரிசனம் | மார்க்க சீரிஷ சுத்த சஷ்டி சதய நட்சத்திரம் மார்கழி (டிசம்பர் -ஜனவரி) | மார்க்க சீரிஷ சுத்த பௌர்ணமி | 10 நாட்கள் |

*மேற்காணப்பட்டவையின்றி கீழ்காணும் மாத, நாள், வார பட்சமற்ற சிறப்பு விழாக்களும் உண்டு.*

பிரயாணிகள் தங்குவதற்கான நவீன வசதிகளுடன் கூடிய விடுதிகளை குறைந்த வாடகையில் தேவஸ்தானம் அளித்து வருகிறது.

## திருக்கோயிலைச் சேர்ந்த விடுதிகளின் வாடகை விபரம்

| விடுதியின் பெயர் | மொத்த படுக்கை வசதி | அனுமதி க்கபடும் நபர்கள் | 24 மணிநேர 1 நாள் வாடகை | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. இராமமந்திரம் பங்களா | 6 படுக்கை | 6 நபர்கள் | ரூ.600 | அதிகமாக உள்ள ஒவ்வொரு நபருக்கும் ரூ.10 செலுத்தவேண்டும். மேலும் 5 பேர் தங்கலாம். |
| 2. திருப்பணி பங்களா | 4 படுக்கை | 10 நபர்கள் | ரூ.500 | அதிகமாக உள்ள ஒவ்வொரு நபருக்கும் ரூ.5 செலுத்த வேண்டும். 60 பேர்வரை தங்கலாம். |
| 3. வடக்குரத வீதி குளிர் பதன அறைகள் (2) | 2 படுக்கை | 4 நபர்கள் | ரூ.500 | அதிகமாக உள்ள ஒவ்வொரு நபருக்கும் ரூ.5 செலுத்தவேண்டும். மேலும் 2 பேர் தங்கலாம். |
| 4. பிர்லா விடுதி (அறைகள்) | 4 படுக்கை | 4 நபர்கள் | ரூ.300 | அதிகமாக உள்ள ஒவ்வொரு நபருக்கும் ரூ.5 செலுத்த வேண்டும். மேலும் 4பேர் தங்கலாம். |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. பிர்லா விடுதி ஒரு படுக்கை பொது அறைகள் (4) | 1 படுக்கை | 2 நபர்கள் | ரூ. 50 | |
| 6. விவேகானந்தர் இல்லம் ஒரு படுக்கை அறைகள் (4) | 1 படுக்கை | 2 நபர்கள் | ரூ. 50 | |
| 7. விவேகானந்தர் இல்லம் இரு படுக்கை அறைகள் (18) | 2 படுக்கை | 4 நபர்கள் | ரூ. 100 | 4 நபர்கள் மட்டும் தங்கலாம். |
| 8. பிர்லா ஆய்வு விடுதி | 2 படுக்கை | 4 நபர்கள் | ரூ. 100 | 4 நபர்கள் மட்டும் தங்கலாம். |
| 9. வடக்கு பகுதி குடில்கள் (14) | 2 படுக்கை | 4 நபர்கள் | ரூ. 150 | அதிகமாக உள்ள ஒவ்வொரு நபருக்கும் ரூ.5 செலுத்த வேண்டும். மேலும் 6பேர் தங்கலாம். |
| வடக்கு பகுதி குடில்கள் (4) | 4 படுக்கை | 4 நபர்கள் | ரூ. 200 | அதிகமாக உள்ள ஒவ்வொரு நபருக்கும் ரூ.5 செலுத்த வேண்டும். மேலும் 6பேர் தங்கலாம். |
| | 4 படுக்கை | 4 நபர்கள் | ரூ. 200 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10. | குழுமணி இல்லம்(1) | 4 படுக்கை | 10 நபர்கள் | ரூ. 250 | அதிகமாக உள்ள ஒவ்வொரு நபருக்கும் ரூ.5 செலுத்தவேண்டும். மேலும் 30 நபர்கள் தங்கலாம் |
| 11. | தெற்குப்பகுதி | 2 படுக்கை | 4 நபர்கள். | ரூ. 250 | அதிகமாக உள்ள ஒவ்வொரு நபருக்கும் ரூ.5 செலுத்தவேண்டும்.மேலும் 6நபர்கள்தங்கலாம். |
| 12. | மேற்படி | 4 படுக்கை | 4 நபர்கள் | ரூ. 200 | அதிகமாக உள்ள ஒவ்வொரு நபருக்கும் ரூ.5 செலுத்தவேண்டும். மேலும் 6நபர்கள்தங்கலாம் |
| 13. | மேற்படி (1) (அன்பு இல்லம்) | 4 படுக்கை | 4 நபர்கள் | ரூ.150 | அதிகமாக உள்ள ஒவ்வொரு நபருக்கும் ரூ.5 செலுத்தவேண்டும். மேலும் 6நபர்கள்தங்கலாம் |
| 14. | திருப்பதி தங்கும் விடுதி இரு படுக்கை அறைகள் (16) | 2 படுக்கை | 4 நபர்கள் | ரூ. 100 | 4 நபர்கள்தங்கலாம் |
| 15. | தமானி தங்கும் விடுதி (16) | 2 படுக்கை | 4 நபர்கள் | ரூ. 100 | 4 நபர்கள் தங்கலாம். |

குறிப்பு 1) மேற்கண்ட வாடகை தொகையில் 20 வாடகை 20 நிர்வாகச் செலவு, 20 பனிக்கட்டணம் 20 மின்கட்டணம் 20 தண்ணீர் கட்டணம் சேர்த்து

2) இனம் 5ல் கண்ட அறை நீங்கலாக ஏனைய விடுதி, குடில்களில் குளிக்கும் அறை, கழிவு அறை, மின்விசிறி மற்றும் தேவையான வசதிகளுடன் கூடியது.

3) இனம் 5ல் கண்ட அறையில் மட்டும் குளியல் அறை கழிவு அறை பொதுவானது.

4) தங்கிய நேரத்திலிருந்து 24 மணி நேரம் ஒரு நாள் எனக் கணக்கிடப்படும்.

5) ஒருநாள் வாடகையுடன் பதிவுக்கட்டணம் ரூ.5.00 சேர்த்து முன்னதாக டெபாசிட் செய்து தபால் மூலம் விவரம் தெரிவிக்க வேண்டும்.

6) 15 நாட்களுக்கு முன்னதாக எழுதினால் அறைகள் ஒதுக்கீடு செய்து தபால் மூலம் விவரம் தெரிவிக்கப்படும்.

7) தங்கும் விடுதிகளுக்கு அருகில் சாப்பாட்டிற்கு வசதியான உணவு விடுதிகள் உள்ளன.

8.) அறைகள் முன் பதிவுக்கு 15 நாட்களுக்கு முன்னதாக குறைந்தது ரூ.100-ஐ முன்பதிவு கட்டணமாக மணியாடர்ட் மூலம் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பி வைத்தால் முன்பதிவு செய்து தரப்படும். முன் பதிவு செய்யப்பட்டால் முன் பதிவு கட்டணம் திரும்ப வழங்கப்படமாட்டாது.

இணை ஆணையர் / நிர்வாக அதிகாரி
அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில்,
இராமேசுவரம்

## திருக்கோயிலைச் சேர்ந்த தங்கும் விடுதிகள் தவிர தனியார் விடுதிகள் :

1. மகாபீர் தர்மசாலை - இரயில் நிலையம் அருகில் (மின் விளக்கு - தண்ணீர் குழாயுடன்)
2. இராமநாதபுரம் இராஜா சந்திரம் - மேலக்கோபுர வாசலருகில், (மின் விளக்கு - தண்ணீர் குழாயுடன்)
3. இராமகுமார் சத்திரம் - மேலரத வீதி
4. திருப்பனந்தாள் - காசி மடம் - கிழக்கு ரத வீதி
5. ஸ்ரீ சிருங்கேரி மடம் - கிழக்கு ரத வீதி
6. ஸ்ரீ சங்கர மடம் - சந்நிதித் தெரு
7. தூத்வாலா தர்மசாலை - கங்காதர பீதாம்ப பண்டா நிர்வாகம் - இரயிலுக்குப் போகும் சாலை (மின் விளக்கு - தண்ணீர் குழாயுடன்)
8. பென்சிலால் அபீர்சந்த் தர்மசாலை - மேலத்தெரு (மின் விளக்கு - தண்ணீர் குழாயுடன்)
9. குஜராத்தி சத்திரம் - வடக்கு ரத வீதி
10. அகல்யாபாய் சத்திரம் - கிழக்கு சந்நிதித் தெரு (மின் விளக்கு - தண்ணீர் குழாயுடன்)
11. ஆமதாபாத் சேட் மாணிக்சந்த் கோவன்தாஸ் சத்திரம் மேலத்தெரு (மின் விளக்கு - தண்ணீர் குழாயுடன்)
12. இராஜா சிவபாக்ஸ் சத்திரம் - மேலத் தெரு (மின் விளக்கு - தண்ணீர் குழாயுடன்)
13. மீர்சகாபூர் பிண்ணானி சத்திரம் - நடுத்தெரு (மின் விளக்கு - தண்ணீர் குழாயுடன்)
14. பகவான்தாஸ் பாக்லா சத்திரம் - திட்டக்குடி (காஷ்மீர் காரர்களுக்கு மட்டும்)
15. ஜம்மு சத்திரம் - நடுத்தெரு (காஷ்மீர்காரர்களுக்கு மட்டும்)
16. பாங்கூர் தர்மசாலா - தெற்கு ரத வீதி
17. குஜராத் பவன் - சந்நிதித்தெரு
18. சாஹூவாலா சத்திரம் சன்னதி தெரு

19. பஜ்ரங்தாஸ் பாபா தர்மசாலா, சன்னதி தெரு
20. சித்திர பந்தையா துர்வாசுலு சத்திரம் - வர்த்தகர் தெரு
21. கர்லாபாடி சாமளா அம்மன் சத்திரம் - மேலத்தெரு
22. ஆரிய வைசிய சத்திரம் - மேலத்தெரு
23. ரெட்டியார் மடம் - மேலத்தெரு, ரெட்டியார்களுக்கு மட்டும்
24. நாடார் சத்திரம் - புதுத்தெரு நாடார்களுக்கு
25. பரமக்குடி ஜயாசாமி செட்டியார் சத்திரம் - தெற்கு ரத வீதி காசுக்காரச் செட்டியார்களுக்கு
26. நகரத்தார் விடுதி - தெற்கு ரத வீதி நகரத்தார்களுக்கு
27. மதுரை வி.எஸ்.கே. முத்துராமய்யர் சத்திரம் - கிழ்ககுரத வீதி - சௌராஷ்டிர பிராமணர்களுக்கு
28. குசலரா சத்திரம் - தெற்கு ரத வீதி - சௌராஷ்டிரா பிராமணர்களுக்கு
29. உடுப்பி நரசிம்மராவ் சத்திரம் - வடக்கு ரத வீதி, உடுப்பி பிராமணர்களுக்கு
30. காசி மடம் - நடுத்தெரு, கொங்கணி பிராமணர்களுக்கு
31. ஜங்கமவாடி மடம் - நடுத்தெரு லிங்காயத்து யாத்சேரிகளுக்கு
32. சிங் மடம் - சீக்கியர்களுக்குமட்டும்
33. கோசுவாமி மடம் - வி.ஐ.பி.

## இராமேசுவரம் - சேதுவைப் பற்றிக் குறிப்புகள் உள்ள நூல்கள்

1. ரிக்வேதம்
2. தைத்திரிய சம்ஹிதை அல்லது கிருஷ்ணயஜுர் வேதம்
3. தனு ஸ்மிருதி
4. காலவ ஸ்மிருதி
5. மரீசி ஸ்மிருதி
6. தேவல ஸ்மிருதி
7. பராசர ஸ்மிருதி

8. வால்மீகி இராமாயணம்
9. அத்யாத்ம இராமாயணம்
10. அத்யாத்ம இராமாயணம்
11. ஆனந்த இராமாயணம்
12. கம்ப இராமாயணம்
13. ஆக்நேய புராணம்
14. பாகவத புராணம்
15. பத்ம புராணம்
16. சிவபுராணம்
17. கூர்மபுராணம்
18. ஸ்கந்த புராணம்
19. மார்க்கண்டேய புராணம்
20. பிரம்மாண்ட புராணம்
21. மச்ச புராணம்
22. தெய்வ கணபதி - துதி
23. திருஞானசம்பந்தர் தேவாரம்
24. அப்பர் தேவாரம்
25. சேக்கிழார் பெரிய புராணம்
26. அருணகிரிநாதர் திருப்புகழ்
27. தாயுமானவர் பாடல்
28. அருணாசல கவிராயர் பாடல்கள்
29. வேதாந்த தேசிகர் - தயாசதுகம்
30. வேதாந்த தேசிகர் - தயாசதகம்
31. பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற் புராணம்
32. சொக்கநாதப் புலவர் - தேவையுலா
33. நிரம்ப அழகிய தேசிகர் - சேது புராணம்

## தீர்த்தங்கள்

1. மகாலக்ஷ்மி தீர்த்தம்

2. சாவித்திரி தீர்த்தம்
3. காயத்திரி தீர்த்தம்
4. சரசுவதி தீர்த்தம்
5. சேதுமாதவ தீர்த்தம்
6. கந்தமாதன தீர்த்தம்
7. கவாட்ச தீர்த்தம்
8. கவய தீர்த்தம்
9. நள தீர்த்தம்
10. நீல தீர்த்தம்
11. சங்கு தீர்த்தம்
12. சக்கர தீர்த்தம்
13. பிரமஹத்தி பாப விமோசன தீர்த்தம்
14. சூரிய தீர்த்தம்
15. சந்திர தீர்த்தம்
16. கங்கா தீர்த்தம்
17. யமுனா தீர்த்தம்
18. கயா தீர்த்தம்
19. சிவ தீர்த்தம்
20. சாத்தியாமிருத தீர்த்தம்
21. சர்வ தீர்த்தம்
22. கோடி தீர்த்தம்

## சந்நிதிகள்

1) இராமநாசுவாமி சந்நிதி
2) விசுவநாதர் சந்நிதி
3) விசாலாட்சி சந்நிதி
4) உற்சவ மூர்த்தி சந்நிதி
5) அம்பாள் சந்நிதி
6) பள்ளிகொண்ட பெருமாள் சந்நிதி

7) சந்தான கணபதி, சௌபாக்கிய கணபதி சந்நிதி
8) சுக்கிரவார சவுக்கை மண்டபம்
9) கல்யாண சுந்தரேசுவரர் சந்நிதி
10) மகாகணபதி சந்நிதி
11) முருகன் சந்நிதி
12) கருவூலம்
13) சேதுமாதவர் சந்நிதி
14) இராமலிங்கப் பிரதிஷ்டை
15) சபாபதி சந்நிதி
16) ஆஞ்சநேயர் சந்நிதி, அனுப்பு மண்டபம்
17) மகாலட்சுமி சந்நிதி
18) கல்யாண மண்டபம்
19) நந்தி

## இராமேசுவரம் பொதுத்தகவல்கள்

| | | |
|---|---|---|
| அ. | பரப்பளவுகள் : | : 13,224.22 ஏக்கர் கோயில் பரப்பளவு 15 ஏக்கர் |
| ஆ. | மக்கள் தொகை | : 32,500 1991-ம் வருட ஜனத்தொகை கணிப்புப்படி |
| இ. | இடம் | : கடல் மட்டத்திற்கு மேல் உயம் 10 |
| ஈ. | தட்பவெப்பநிலை | : |
| | கோடை வெப்பம் | : உயர்ந்த அளவு 98செ.பி<br>குறைந்த அளவு 46செ.பி |
| | குளிர்காலவெப்பம் | : உயர்ந்த அளவு 30செ.பி<br>குறைந்த அளவு 30செ.பி |
| | மழை | : சராசரி 32 |
| உ. | முக்கிய திருவிழாக்கள் | : பிப்ரவரி - மார்ச்<br>மகாசிவராத்திரி<br>மே - ஜுன்<br>இராமலிங்க பிரதிஷ்டை உற்சவம்<br>ஜுலை - ஆகஸ்ட் |

ஆடித் திருக்கல்யாண உற்சவம்
செப்டம்பர் - அக்டோபர்
நவராத்திரி உற்சவம்

பேசப்படும் மொழிகள் : தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மராத்தி மற்றும் வட இந்திய மொழிகள்.

## செய்தி போக்குவரத்து

அருகிலுள்ள விமான நியைம் : மதுரை - **164 கி.மீ.**

புகைவண்டி நிலையம் : இராமேசுவரம்

பேருந்து நிலையம் : இராமேசுவரம்

இரயில் செல்லும் மார்க்கம் :

துரித வண்டி - சென்னை - **666கி.மீ.**

வழி : மானாமதுரை, திருச்சி, தஞ்சாவூர், சிதம்பரம்

துரித வண்டி - கோயமுத்தூர், பழனி

பிரயாணிகள் வண்டிகள் - **மதுரை 164கி.மீ**

வழி : மானாமதுரை

**பேருந்துகள் :** மண்டபம் - பாம்பன் இடையே கடலில் சாலைப் பாலம் அமைக்கப்பட்ட பிறகு தற்போது தமிழ் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் இராமேசுவரத்திற்குப் பேருந்துப் போக்குவரத்து வசதி உள்ளது. பஸ் நிலையத்திலிருந்து கோயிலுக்கு வர ஒவ்வொரு பத்து நிமிடத்திற்கும் பேருந்துகள் இயங்குகின்றன.

**மருத்துவ மனைகள் :**

அரசினர் மருத்துவமனைகள் -
தொலைபேசி எண் : 21233

ஆலய ஆயுர்வேத மருத்துவமனை

**அஞ்சல் அலுவலகம் :**

மேலத்தெருவில் உள்ளது.
தொலைபேசி எண் : 21230

: நடுத்தெரு தொலைபேசி
எண் : 21225

## திருக்கோயிலால் நடத்தப்படும் சமூக நலத்திட்டங்கள்




1. கருணை இல்லம்
2. ஆயுர்வே மருத்துவ நிலையம்
3. பர்வதவர்த்தினி அம்மன் பெண்கள்மேல்நிலைப்பள்ளி
4. நூல் நிலையம்
5. கோசாலை
6. தேவாரப்பள்ளி - கருணை இல்லம் மேல் நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கற்றுக் கொடுக்கப்படுகிறது.
7. அன்னதானம்

## இராமேச்சுர துதிப்பாக்கள் தெய்வ கணபதி துதி


*வேணிமுடிப் பகீரதிநீர் புழைக்கை வாங்கி விடுத்(து)*
*அயன்வெண் தலையுருட்டி, மிளிர்வெண் கோட்டால்*
*கோண் இளைய மதிக்குழவி உழுது மேருக்*
*கொடிமுடியிற் கிளைத்த எண்தோள் குழையத் தாக்கி,*
*தால்நெடிய விடைமுனிந்து, கயிலை முக்கண்*
*தாதையொடும் விளையாடித் தன்பால் அன்பர்*
*மாண்நிலவு மனத்தறி நின்(று) உலவும் தெய்வ*
*வாரணத்தை நினைத்திறைஞ்சி வழுத்தல் செய்வாம்.*

(சேது புராணம்)






கந்தமாதன பர்வதம்




அருள்மிகு கோதண்டராமர் கோவில்



மேற்கு வாயில்



சேது மாதவ தீர்த்தம்



அக்னி தீர்த்தம்

# திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய

# இராமேசுரத் திருப்பதிகம்

பண் - காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

அலைவளர் தண்மதி யோ(டு) அயலே அடக்கி, உமை
முலைவளர் பாகம் முயங்க வல்ல முதல்வன்முனி,
இலைவளர் தாழைகள் விம்மு கானல் இராமேச்சுரம்
தலைவளர் கோலநல் மாலயன் தான்இருந்(து) ஆட்சியே 1

தேவியை வவ்விய தென்னிலங்கைத் தச மாமுகன்
பூவியிலும் முடி பொன்றுவித்த பழிபோய்அற
ஏ(வு) இயலும் சிலை அண்ணல் செய்த இராமேச்சுரம்
மேவிய சிந்தையி னார்கள் தம் மேல் வினைவீடுமே 2

மானை நோக்கியை தேவி தன்னை, ஒரு மாயைபால்
கானதில் வவ்விய கார் அரக்கன் உயிர் செற்றவன்
ஈனம் இலாப் புகழ் அண்ணல் செய்த இராமேச்சுரம்
ஞானமும், நன்பொருள் ஆகிநின்ற(து) ஒரு நன்மையே 3

உரை உணராகவன், காமம் என்னும் உறுவேட்கையால்,
வரைபொரு தோள்இறச் செற்ற வில்லி மகிழ்ந்(து) ஏத்திய
விரை மருருவும் கடல் ஓதம் மல்கும் இராமேசுரத்த(து)
அரை அரவு ஆடநின்று ஆடல் பேணும் அம்மானநல்லனே4

ஊறுடை வெண்தரை கையில் ஏந்திப் பல ஊர்தொறும்
வீறுநடை மங்கையர் ஐயம் பெய்ய, விறல் ஆர்ந்த(து) ஓர்
ஏறுநடை வெல்கொடி எந்தைமேய இராமேச்சுரம்
பேறுடையான் பெயர் ஏத்தும் மாந்தர் பிணி பேருமே. 5

அணை அலை சூழ்கடல் அன்(று) அடைந்துவழி செய்தவன்
பணை இலங்கும் முடி பத்(து) இறுத்த பழி போக்கி
இணையிலி, என்றும் இருந்த கோயில் இராமேச்சுரம்
துணையிலி, தூமலர்ப் பாதம் ஏத்தத் துயர் நீங்குமே. 6

சனி புதன் ஞாயிறு வெள்ளி திங்கள் பல தீயன.
முனிவது செய்(து)உகந்தானை வென்று அவ்வினை மூடிட
இனி அருள் நல்கி(டு) என்று. அண்ணல் செய்த இராமேச்சுரம்
பனிமதி சூடி நின்று ஆடவல்ல பரமேட்டியே. 7

பெருவரை அன்(று) எடுத்து ஏந்தினான் தன்பெயர் சாய்கெட
அருவரையால் அடர்த்து அன்று நல்கி, அயன்மால் எனும்
இருவரும் நாடி நின்(று) ஏத்து கோயில் இராமேச்சுரத்(து)
ஒருவனுமே பல ஆகி நின்ற(து) ஒரு வண்ணமே. 8

சாக்கியர் வன்சமன் கையர், மெய்யில் தடுமாற்றத்தார்
வாக்(கு) இயலும் உரை பற்று விட்டு, மதி ஒண்மையால்
ஏக்கி இயலும் சிலை அண்ணல் செய்த இராமேச்சுரம்
ஆக்கிய செல்வனை, ஏத்தி வாழ்மின் அருள் ஆகவே 9

பகலவன் மீ(து) இயங்காமை காத்த பதியோன்தனை
இக(ல்) அழிவித்தவன் ஏத்து கோயில் இராமேச்சுரம்
புகலியுள் ஞானசம் பந்தன் சொன்ன தமிழ், புந்தியால்
அக(ல்) இடம் எங்கு நின்(று) ஏத்த வல்லார்க்(கு) இல்லை
அல்லலே 10

## திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய இராமேச்சுர திருப்பதிகம்

பண்: பழம் பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

திரிதரு மாமணி நாகம் ஆடத் திளைத்(து) ஒரு தீ அழல்வாய்
நரிகதிக்க எரியேந்தி ஆடும் நலமே தெரிந்(து) உணர்வார்
எரிகதிர்முத்தம் இலங்குகானல் இராமேச்சுரமேய
விரிகதிர் வெண்பிறை மல்கு சென்னி விமலர் சேயும் செயலே!1

பொறிகிளர் பாம்(பு) அரை ஆர்த்து,
அயலே புரிவோ(டு) உமைபாடத்
தெறிகிளரப் பெயர்ந்(து) எல்லி ஆடும்!
திறமே தெரிந்(து) உணர்வார்!
எறிகிளர் வெண்திரை வந்து பேரும்
இராமேச் சுரம் மேய
மறிகிளர் மான்மழுப் புல்குகை எம்
மணாளர் செயும் செயலே. 2

அலைவளர் தண்புனல் வார்சடைமேல் அடக்கி, ஒரு பாகம்
மலைவளர் காதலி பாட ஆடி, மயக்கா வரும் மாட்சி
இலைவளர் தாழை முகிழ் விரியும் இராமேச்சுர மேயார்
தலைவளர் கோவநன் மாலைசூடும் தலைவர் செயும் செயலே 3

மாதன நேரிழை ஏர் தடங்கண்
    மலையான் மகள் பாடத்
தே(து) எரி அங்கையில் ஏந்தி ஆடும்
    திறமே தெரிந்துணர்வார்
ஏதும்இலார் தொழு(து) ஏத்தி வாழ்த்தும்
    இராமேச்சுரம் மேயார்.
போதுவெண் திங்கள் பைங்கொன்றை சூடும்
    புனிதர் செயும் செயலே 4

சூலமோ(டு) ஒண்மழு நின்(று) இலங்கச்
    சுடுகா(டு) இடமாகக்
கோல நன் மா(து) உடன் பாட, ஆடும்
    குணமே குறித்(து) உணர்வார்;
ஏல நறும் பொழில் வண்டு பாடும்
    இராமேச்சுரம் மேய,
நீலமார் கண்டம் உடைய எங்கள்
    நிமலர் செயும் செயலே 5

கணையிணை வெஞ்சிலை கையில் ஏந்திக்,
    காமனைக் காய்ந்தவர் தாம்;
இணைபிணை நோக்கி நல்லாளோ(டு) ஆடும்
    இயல்பினராகி நல்ல
இணைமலர் மேல் அன்னம் வைகு கானல்
    இராமேச்சுரம் மேய
அணைபிணை புல்கு கரந்தை சூடும்
    அடிகள் செயும் செயலே. 6

நீரினார் புன்சசடை பின்பு தாழ,
    நெடுவெண் மதி சூடி,
ஊரினார் துஞ்சிருள் பாடி ஆடும்
    உவகை தெரிந்(து) உணர்வார்
ஏறினார் பைம்பொழில் வண்டு பாடும்
    இராமேச்சுரம் மேய
காரினார் கொன்றை வெண் திங்கள் சூடும்
    கடவுள் செய்யும் செயலே. 7

பொன்திகழ் கண்ணவெண் ணீறு பூசிப்
    புலித்தோல் உடையாக

மின்திகழ் சோதியர் பாடல் ஆடல்

மிக்கார் வரும் மாட்சி
என்றும் நல்லோர்கள் பரவி ஏத்தும்
இராமேச்சுரம் மேயார்
குன்றினால் அன்(று) அரக்கன் தடந்தோள்
அடர்ந்தார் கொளும் கொள்கையே 8

கோவலன் நான்முகன் நோக்கொணாத
குழகன், அழகாய
மேவலன் ஒள் எரி ஏந்தி, ஆடும்
இமையோர் இறை, மெய்ம்மை
ஏவலனார் புகழ்ந்(து) ஏத்தி வாழ்த்தும்
இராமேச்சுரம் மேய
சேவல் வேல்கொடி ஏத்து கொள்கை எம்
இறைவர் சேயும் செயலே. 9

பின்னோடு முன்னிடு தட்டை சாத்திப்
பிரட்டே திரிவாரும்
பொன்னேடும் சீவரப் போர்வையார்கள்
புறம் கூறல் கேளாதே
இன்னோடும் சோலை வண்(டு) யாழ்முரலும்
இராமேச்சுரம் மேய
பன்னெடு வெண்தலை கொண்(டு) உழலும்
பரமர் செயலும் செயலே 10

தேவியை வவ்விய தென் இலங்கை
அதையன் திறல் வாட்டி
ஏ(வு) இயல் வெஞ்சிலை அண்ணல்
நண்ணும் இராமே சுரத்தாரை
நா(வு) இயல் ஞானசம்பந்தன்
நல்ல மொழியால் நவின்(று) ஏத்தும்
பாஇயல் மாலை வல்லார், அவர்தம்
வினை ஆயின பற்றறுமே. 11

## திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய
## இராமேச்சுர திருப்பதிகம்

### திருநேரிசை

பாசமும் கழிக்ககில்லா அரக்கரைப்
படுத்துத் தக்க
வாசமிக்(க) மலர்கள் கொண்டு
மதியினால் மால்செய் கோயில்
நேசமிக்(க) அன்பினாலே
நினைமின் நீர் நின்று நாளும்
தேசம் மிக்கான் இருந்த
திரு இராமமேச்சுரமே. 1

முற்றின நாள்கள் என்று
முடிப்பதே காரணமாய்,
உற்றவன் போர்களாலே
உணர்விலா அரக்கர் தம்மைச்
செற்றமால் செய்த கோயில்
திருஇரா மேச்சுரத்தைப்
பற்றிநீ பரவு நெஞ்சே!
படர்சடை ஈசன்பாலே. 2

கடலிடை மலைகள் தம்மால் அடைத்து
மால் கருமம் முற்றித்,
திடலிடைச் செய்த கோயில்
திருஇரா மேச்சுரத்தைத்
தொடல் இடை வைத்து நாவில்
சுழல்கின்றேன், தூய்மை யின்றி
உடலிடை நின்றும் பேரா
ஐவர் ஆட்டுண்டு நானே. 3

குன்றுபோல் தோளுடைய குணமிலா
அரக்கர் தம்மைக்
கொன்று, போர் ஆழி அம்மால்
வேட்கையால் செய்த கோயில்
நன்று போல் நெஞ்சமே! நீ
நன்மையை அறிதி யாயில்
சென்றுநீ தொழு(து) உய் கண்டாய்
திருஇராமேச்சுரமே. 4

வீரம் மிக்(கு) எயிறு காட்டு
விண்ணுற நீண்(டு) அரக்கன்
கரம் மிக்கவனைச் சென்(று)
கொன்றுடன் கடல் படுத்துத்
தீரம் மிக்கான் இருந்த
திருஇரா மேச்சுரத்தைக்
கோரமிக்(கு) ஆர் தவத்தால்
கூடுவார் குறிப்புளாரே. 5

ஆர்வலம் நம்மின் மிக்கார்? என்ற அவ்வரக்கர் கூடிப்
போர் வலம் செய்து, தம்மை பொருதவர் தம்மை வீட்டித்
தேர்வலம் செற்ற மால் செய் திருஇரா மேச்சுரத்தைச்
சேர்மட நெஞ்சமே நீ, செஞ்சடை எந்தை பாலே. 6

வாக்கினால் இன்புரைத்து வாழ்கிலார்
தம்மை எல்லாம்
போக்கினால் புடைத்(து) அவர்கள்
உயிர்தனை உண்டு, மால்தான்
தேக்குநீர் செய்த கோயில்
திருஇரா மேச்சுரத்தை
நோக்கினால் வணங்குவார்கள்
நோய்வினை நுணுகும் அன்றே. 7

பலவுநாள் தீமை செய்து, பார்தன்மேல் குழுமி வந்து,
கொலைவிலார் கொடியார் ஆயஅரக்கரைக் கொன்று வீழ்த்த
சிலையினான் செய்த கோயில் திருஇராமேச்சுரத்தைத்
தலையினால் வணங்குவார்கள், தாழ்வராம் தவம்(து) ஆமே 8

கோடி மாதவங்கள் செய்து, குன்றினார் தம்மை எல்லாம்
வீடவே சக்கரத்தால் எறிந்து, பின் அன்பு கொண்டு
தேடி மால்செய்த கோயில் திருஇரா மேச்சுரத்தை
நாடி வாழ் நெஞ்சமே! நீ நன்னெறி ஆகும் அன்றே. 9

வன்கண்ணர், வாள் அரக்கர், வாழ்வினை ஒன்(று) அறியார்
புன்கண்ணர் ஆகி நின்று, போர்கள் செய்தாரை மாட்டிச்
செங்கண் மால்செய்த கோயில், திருஇரா மேச்சுரத்தைத்
தங்கனால் எய்தவல்லார், தாழ்வாரம்தலைவராம் தலைவன் பாலே 10

வரைகள் ஒத்தே உயர்ந்த
மணிமுடி அரக்கர் கோனை
விரைய முற்(று) அற ஒடுக்கி
மீண்டு மால் செய்த கோயில்
திரைகள் முத்தால் வணங்கும்
திருஇரு மேச்சுரத்தை
உரைகள் பத்தால் உரைப்பார்
உள்குவார் அன்பினாலே. 11

திருச்சிற்றம்பலம்

## ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் க்ருதி

ராகம் : காமவர்த்தினி தாளம் : ஆதி

### பல்லவி

ராமனாதம் பஜேஹரம்
ராமசந்த்ர பூஜிதம் (ராம)

### அனுபல்லவி

காமித பலப்ரததேவம்
கோடி துர்த்த பிரபாவம்
குமார குருகுஹ மஹிதம் கவிபிருந்தா திஸன்னுதம்
(ராம)

### சரணம்

ஸேது மத்ய கந்தமாதன பர்வத விஹாரம்
ஸதா பர்வதவர்த்தினி மனோல்லாசகரம்
ஹஸ்தாமலக வந்தியவரம்
ஹாடகமய சேல தரம்
ஹத்யாதி பாப ஹரம்
ஹம் ஸஸ்ஸோ ஹாகாரம் (ராம)

### அஞ்சலி

எழும்போதும் ராம ராம என்பேன்: எழுந்தே மகிழ்ந்து
தொழும்போதும் ராம ராம என்பேன் தொழுதே உருகி

அழும்பொழுதும் ராம ராம என்பேன், அடியேன் உடலம்
விழும்பொழுதும் ராம ராம என்பேன் சேவை விரைந்தருளே!
அடிக்கினும் ராம ராம என்பேன் அரவன் துரத்திக்
கடிக்கினும் ராம ராம என்பேன் கருங்காலன் எனைப்
பிடிக்கினும் ராம ராம என்பேன் பெருங் தீயில் மண்டை
வெடிக்கினும் ராமஸ்ரீ ராம என்பேன், என்முன் வந்தருளே!
(இராம என்பது – தாரக மந்திரம்)

குகஸ்ரீ ரஸபதி

## அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்

வால வயதாகி, அழ காகி, மத னாகி பணி
வாணிப (மொடு) ஆடிமருள் ஆடி, விளை யாடி, விழல்
வாழ்வு சதம் ஆகி, வலு வாகி, மடகூட மொடு பொருள்தேடி

வாச புழுகோடு, மலரோடு, மணம் ஆகி, மகிழ்
வாசனைகள் ஆதியிடல் ஆகி, மயல் ஆகி, விலை
மாதர்களை மேவி அவர் ஆசைதனி லேசுழல சிலநாள் போய்த்

தோல் திரைகள் ஆகி, நரையாகி, குருடாகி, இரு
கால்கள் தடுமாறி, செவி மாறி, பசு, பாசபதி
சூழ்கதிகள் மாறி, சுகம் மாறி, தடியோடுதிரி யுறுநாளின்

சூலை, சொறி ஈளை வலி, வாதமொடு, நீரிழிவு
சோகை, கள மாலை, கர மொடு, பிணி தூ(று) இருமல்
சூழலுற மூலகசு மாலம் என நாறி உடல் அழிவேனோ?

நாலுமுகன் ஆதி அரி ஓம் என, அதாரம் உரை
யாதபிர மாவை விழ மோதி, பொருள் ஓதென்,
நாலு சிர மோடு, சிகை தூளி பாடதாளம் இடும் இளையோனே

நா(று) இதழி வேணி சுவ ரூபகலியாணி முதல்
ஈண மக ஆனை மகிழ் தோழி வன மீதி செறி
ஞானகுற மாதை, தினை காவில் மணம் மேலபுகழ் மயில்வீரா!

ஓலமிடு தாடகை சு வாகு, வளர் எழுமரம்
வாலியொடு, நீலி, பகனோடு(டு) ஒருவி ராதன் எழும்
ஓதகடலொடு, விறல் ராவண குழாம் அமரில் பொடியாக

ஓகை தழல் வாளிவிடு மூர்தநு. நேமி, வளை
பரணி, திருமார்பின் அரிகேசன் மரு காஎனவெ.
ஓத மறை ராமேசுவரம் மேவுகும ரா அமரர் பெருமானே!

வானோர் வழுத்துனது பாதார பத்மமலர்
மீதே, பணிக்கும் வகை. அறியாதே

மானார் வலைக் கண் அதி லே தூளி மெத்தையினில்
ஊடே அணைத்(து) உதவம் அதனாலே

தேனோடு, மருப்பில் எழு பாகோ, இதற்(கு) இணைகள்
எதோ எனக் கலவி பலகோடி

தீரா மயக்கினொடு, நாகா படத்தில் எழு
சேறாடல் பெற்ற துயர் ஒழியேனோ?

மேனாடு பெற்றுவளர் சூராதிபற்(கு) எதிரின்
ஊ(டு) ஏகி நிற்கும் இரு கழலோனே!

மேகார உக்ர பரி தான் ஏறி, வெற்றிபுனை
பீரா! குறச் சிறுமி மணவாளா

ஞானா பரறு(கு) இனிய வேதாக மப்பொருளை
நாணாது உரைக்கும் ஒரு பெரியோனே

நாராயணத்திற்கு மருகா! வீறு பெற்றிரகு
ராமேச்சு ரத்திலுறை பெருமாளே!

## தாயுமானவர் பாடல்

பதியுண்டு, நிதியுண்டு, புத்திரர்கள் மித்திரர்கள்
பக்கமுண்(டு), எக்காலமும்
பலிசுண்டு, தவிசுண்டு, திட்டாந்தம் ஆக யம
படர் எனும் திமிரம் அனுகாக்
கதியுண்டு, ஞானமாம் கதிருண்டு, சதிருண்டு
காயசித் திகளும் உண்டு
கறையுண்ட கண்டர்பால், அம்மை! நின்தாளில்
கருத்(து) ஒன்றும் உண்டாகுமேல்;
நதியுண்ட கடலெனச், சமயத்தை உண்டபர
ஞான ஆநந்த ஒளியே
நாதாந்த ரூபமே; வேதாந்த மோனமே!
நான் எனும் அகந்தை தீர்த்(து) என்
மதியுண்ட மதியான மதிவதன வல்லியே!
மதுசூதனன் தங்கையே!
வரை ராஜனுக்கு இருகண் மணியாய் உதித்தமலை 1
வளர் காதலிப் பெண் உமையே!

பூரணி, புராதனி, சுமங்கலை, சுதந்திரி,
புரந்தகி, த்ரியம்பகி, எழில்
புங்கவி, விளங்குசிவ சங்கரி, சகஸ்ரதன
புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணி, மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சக்தி என்னுள்
நாமமே உச்சரித்திடும் அடியார் நாமமே
நான் உச்சரிக்க வசமோ?
ஆரணி, சடைக்கடவுள் ஆரணி எனப்புகழ
அகிலாண்ட கோடி யீன்ற
அன்னையே! பிள்ளையும் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே!
வாரணியும் இருகொங்கை மாதர் மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவை அரசே!
வரை ராஜனுக்(கு) இருகண் மணியாய் உதித்தமலை
வளர் காதலிப் பெண் உமையே! 2

## ஸ்ரீ பர்தவ வர்த்தினி பிள்ளைத் தமிழ்

வரும்பே ரின்பத் துறை கொழிக்கும்
மணியே வருக! சிவாநந்த
வடிவே வருக! உயிர் மலநோயக்
மாற்றம் மருந்தே வருக! பசும் 1

கரும்பே வருக! எங்கள் இரு
கண்ணே வருக! கண்மணியுள்
கலந்த பாவாய் வருக! சிவம்
கமிழ்தேன் கலந்துள் களித்தருந்தும் 2

கரும்பே வருக! முத்திநெறித்
துணையே வருக! பாவம் தொலைக்கும்
சுடரே வருக! தொண்டர் குழாம்
தொழும்இ ராமேச்சுரத்தில் உள்ள 3

தரும்தேங் கனியே வருக! உயர்
காயே வருக வருக வருகவே!
சலியா(து) அருளும் மறைவளர்கா
தலியே வருக, வருகவே, 4

செய்ந்நன்றி கொன்ற பாவம் தவிர்த்திடு சங்க
தீர்த்தம், நல்சீதை கற்பின்
திறம் அறிவுறுத்தும் அக்கினி தீர்த்தம், அறுபட்ட
செங்கையும் காலும் வளர 5

உய்ந்நன்றி செய்தமுனி தீர்த்தம், சிவார்ச்சனைக்(கு)
உபயோகமா உஞற்யல்
உற்று, வறுமைப் பிணி அகற்று அலக்குமி தீர்த்தம்,
உயர்கால வயிரவர்க்குப் 6

பெய்ந்நன்றி தவிர் பிரம கத்தியகல் வித்தஒரு
பெரியசீவ தீர்த்தம், என்றும்
பெயராஇ ராமேசுரத்(து) உள(து) அன்றியும்
பேசுவார் மாசு பிரிய 7

மெய்ந்நன்றி அரளும் நீ பொதியை நின்(று)
எழுபொறை வெள்ள நீர் ஆடியருளே
மெய்த்தவர் தொழும் பர்வத வர்த்தினி? வரும் புதிய
வெள்ள நீர் ஆடியருளே 8

கவியில் உயர் கம்பன்போல் எழுபது
வெள்ளம் கொண்ட கவிகட்கெல்லாம்
புவியில் உயர்வுற்(று) இராகவன்: தூதாய்
இலங்கையிற் போய்ப் பொருது மீண்டு: 9

குவிசையொடு காசியிற் சென்(று) இறைஞ்சி, இரு
சிவலிங்கம் கொணர்ந்து தாபித்(து)
அவர்இரா மேச்சுரத்தில் அமர் அநும
கவிஇருசீர் அடிகள் போற்றி. 10

## சேது - புராணம் இராமநாதர் சருக்கம்

நர்வினால் ராமநாதன் நல்லருள் வழுத்த நாளும்
பூவினால் பூசைசெய்யம், புகழ்ந்திடச் சேதுவின்கண்
சாவுறக் கிடையாது யார்க்கும் தாணுவே, நீயேதாணு
ஆவதென்று ணர்வார் வென்றி அடைகுவர் இங்கும் அங்கும் 1

வேதநூல் சாத்திரங்கள் வேள்விகள் எல்லாம் இராம
நாதனே பிறிதொன்றில்லை நம்பனை யவனைத்தானே
ஆதரவதனால் போற்றி யடிதொழல் வேண்டும். அன்னோன்
தா(து) அவிழ், சரோருகப்பூஞ் சரணமே ஆனோர் 2





## அருள்மிகு ஆஞ்சநேயர் துதி

அஞ்சிலே ஒன்று பெற்றான்.
அஞ்சிலே ஒன்றைத் தாவி,

அஞ்சிலே ஒன்(று) ஆறாக
ஆரியதற்காக ஏகி,

அஞ்சிலே ஒன்று பெற்ற அனங்கைக்கண்டு அயலாருரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான், அவன்
எம்மை அளித்துக் காப்பான். (கம்பர்)


## சேதுபுராண வாழ்த்து

மாதுகரை வளர்காதல் வல்லி வாழ்க!
மாற்(கு) அருள்கூர் சிவராம நாதன் வாழ்க!
சேதுவுடன் தனுக்கோடி தீர்த்தம் வாழ்க!
திகழ்தீர்த்தம் அறுநான்கும் சிறந்து வாழ்க!
நாதன்இரா மேச்சுரனை அருச்சிப்போரும்.
நல்தானம் தவம் அனைத்தும் நயந்து வாழ்க!
மாதவர்கள் மிக வாழ்க, இராமநாத
மாமுனிவர் நீடுழி வாழ்க மாதோ!

## பக்தர்களுக்கு ஓர் வேண்டுகோள்

திருக்கோயிலில் நடத்தப்படும் மாபெரும் வடக்கு, தெற்கு கோபுரத் திருப்பணி, இரண்டாம் பிரகாரம் மற்றும் அம்பாள் சன்னதி முன் மண்டபத் திருப்பணிக்கும் தாராளமாக நன்கொடை வழங்கக் கேட்டு கொள்ளப்படுகிறது. இந்த நன்கொடைக்கு வருமானவரி விலக்கு அளிக்கப்படுகிறது. இந்தத் திருக்கோயிலில் அருள்மிகு இராமநாத பெருமானுக்கும், அருள்மிகு பர்வதவர்த்தினி அம்பாளுக்கும் நடத்தப்படும் சகஸ்ரநாம அர்ச்சனையிலும் சேர்ந்து பயனடையுங்கள்.

சகஸ்ரநாம அர்ச்சனை ஒன்றுக்கு கட்டணம் ரூ. 200/- (சுவாமி சன்னதி சிறப்பு நுழைவுவாயில் அனுமதி இரண்டு நபர்கள்) மற்றும் 5கிராம் எடையில் ஸ்ரீ சுவாமி ஸ்ரீ அம்பாள் உருவம் பொதித்த வெள்ளிடாலர் வழங்கப்படும்.




**N.B.: Rameswaram Road. R.S. to Dhanushkodi R.S. Old railway line since dismantled not in existence now**


**இராமேசுவரம் ரோடு தனுஷ்கோடி இரயில் பாதை இப்போதில்லை.**

## தினப்பலன் : - ஓரையும் - கௌரியும், முக்குணமும்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | சுக்கிரன் அமுதம் 7-8 சாதுவிகம் 7-30-8 | சந்திரன் 9-10 | குரு 11-12 லாபம் 11-12 | எமகண்டம் 12-1-30 | சுக்கிரன் 2-3 சுகம் 2-3 | சந்திரன் 4-4-30 | இராகு காலம் 4-30-6 |
| திங்கள் | சந்திரன் 6-7 அமுதம் சாத 6-7 | இராகு காலம் 7-30-9 | எமகண்டம் 10-30-12 | சந்திரன் 1-2 தனம் 1-1-30 | குரு 3-4 சாதுவிகம் 3-4 | சுக்கிரன் 6-7 சுகம் 6-7 | சந்திரன் 8-9 சாத்துவிகம் 8-9 |
| செவ்வாய் | சுக்கிரன் 8-9 லாபம் 8-9 | எமகண்டம் 6-10-30 | சந்திரன் 10-30-11 சுகம் 10-30-11 | குரு 12-1 | இராகு காலம் 3-4-30 | குரு 4-5 அமுதம் 4-4-30 | குரு 7-8 |
| புதன் | சந்திரன் 7-7-30 லாபம் 7-7-30 | எமகண்டம் 7-30-9 | குரு 9-10 சுகம் 11-12 | இராகு காலம் 12-1-30 | சந்திரன் 2-3 | குரு 4-5 அமுதம் 4-4-30 | சுக்கிரன் 7-8 அமுதம் 7-7-30 |
| வியாழன் | எமகண்டம் 6-7-30 | சுக்கிரன் 9-10 | சந்திரன் 11-12 சாத் 11-12 | குரு 1-1-30 அமுதம் 1-1-30 | இராகு காலம் 1-30-3 | சுக்கிரன் 4-5 லாப 4-4-30 சாத 4-4-30 | சந்திரன் 6-7 அமிர்தம் 6-7 |
| வெள்ளி | சுக்கிரன் 6-7 சுகம் 6-7 | சந்திரன் 8-9 | குரு10-10-30 சாத்துவிகம் 10-10-30 | இராகு காலம் 10-30-12 | சுக்கிரன் 1-2 அமுதம் 1-1-30 | எமகண்டம் 3-4-30 | குரு 5-6 தனம் 5-6 |
| சனி | குரு 7-8 சாத் 7-30-8 | இராகு காலம் 9-10-30 | சுக்கிரன் 10-30-11 அமு10-30-11 | சந்திரன் 12-1 சாத12-1 | எமகண்டம் 1-30-3 | சுக்கிரன் 5-6 சுகம் 5-6 | சந்திரன் லாப 7-7-30 சாத 7-30-8 |

*இராகுகாலம். எமகண்டம், நீங்கலாக, இதனில் குறித்த உத்தம காலங்களில் ஸ்ரீ இராநாதசுவாமி பெருமானை தியானித்துச் செயல்களில் இறங்கினால் எல்லாம் அனுகூலமாகும்.*

*(சாத் என்று குறிப்பிட்டதெல்லாம் சாத்துவிரதம்)*


N
மேற்கு மூன்றாம் பிரகாரம்
சேதுமாதவர் தீர்த்தம்
6
8
9
7
10
சேது மாதவர் சன்னதி
11
மேற்கு இரண்டாம் பிரகாரம்
தெற்கு மூன்றாம் பிரகாரம்
வடக்கு மூன்றாம் பிரகாரம்
அம்பாள் முதல் பிரகாரம்
சுவாமி முதல் பிரகாரம்
12
22
சுக்ரவார மண்டபம்
13
14
15
16
17
19
21,20
அறை வாசல்
சந்தன அறை
சிவ தீர்த்தம்
நந்தி மண்டபம்
கிழக்கு இரண்டாம் பிரகாரம்
18
மடப் பள்ளி
மடப்பள்ளி வரண்டா
5
வாகன அறை
பேஸ்கார் அலுவலகம்
பத்துக் கொள்ளை
கிழக்கு மூன்றாம் பிரகாரம்
வாகன அறை
பரிவட்ட அறை
பதிவேடுகள் அறை
B 2
C 3
D 4
கல்யாண மண்டபம்
1
அனுப்பு மண்டபம்

## தீர்த்தங்கள்

1. மகாலக்ஷ்மி தீர்த்தம்
2. சாவித்திரி தீர்த்தம்
3. காயத்திரி தீர்த்தம்
4. சரசுவதி தீர்த்தம்
5. சக்கர தீர்த்தம்
6. சேதுமாதவ தீர்த்தம்
7. நள தீர்த்தம்
8. நீல தீர்த்தம்
9. கவய தீர்த்தம்
10. கவாட்ச தீர்த்தம்
11. கந்தமாதன தீர்த்தம்
12. பிரமஹத்தி தீர்த்தம்
13. சூரிய தீர்த்தம்
14. சந்திர தீர்த்தம்
15. சாத்தியாமிருத தீர்த்தம்
16. சிவ தீர்த்தம்
17. சர்வ தீர்த்தம்
18. சங்கு தீர்த்தம்
19. கயா தீர்த்தம்
20. யமுனா தீர்த்தம்
21. கங்கா தீர்த்தம்
22. கோடி தீர்த்தம்



SRI RAJA PRESS, MADURAI - 1. Ph : 2622025

உலகப் புகழ்பெற்ற மூன்றாம் பிரகாரம்